# தமிழியம்

மருத்துவர் சி.யமுனாநந்தா

4127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்.


பக்கம்.

- முகவுரை 02
- தமிழியம் 03
- தமிழியம் ததும்பும் தமிழர்கள் 05
- இலங்கையில் 2009ம் ஆண்டு நிகழ்ந்த இனப்படுகொலை பற்றி ஐநா விட்ட தவறுகள், ஐநாவில் தமிழ் மொழி இனத்திற்கான சிறப்புப்பிரநிதித்துவத்தின் அவசியத்தைக் எடுத்துக்கூறுகின்றது. 07
- இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து அடக்கப்படுதல் தமிழியம். 10
  கோட்பாட்டினை வலிமைப்படுத்த வேண்டிய அவசியத்தினைக் கூறுகின்றது.
- இலங்கையின் நீதித்துறையில் ஏற்பட்டுள்ள சலனத்தால் ஈழத்தமிழர் உரிமைகள் மேலும் பாதிக்கப்படும். 14
- இலங்கையில் இன முரண்பாடு பற்றி 125 வருடங்களுக்கான ஆய்வு. 15
- இலங்கையில் தமிழர்கள் அடக்கப்படும் வழிகளும், அவற்றினை எதிர்கொள்ளும் வழிப்பும். 28
- இனப்படுகொலையின் பத்துப்படிநிலைகளும் அவை இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக நடந்தமையை இல்லை என்று கூறாதிருப்பதற்கான அம்சங்களும். 33
- தர்மத்திற்கான தமிழர்கள் 40
- 009 தமிழீழ விடுதலைப்புலிகளின் அழிப்பும் தமிழின அழிப்பும் நிகழ்ந்தவையும், நிகழ்கின்றவையும். 45
- ஈழத்தமிழர் இனப்பிரச்சினையின் வியாபகம் 49
- தமிழியம். 51
- தமிழே தமிழே உயிர்த்தெழு 52
- வடமாகாணச்சபைத் தேர்தல்கள் 54
- 2009இல்....... 56
- இலங்கையின் இன நல்லிணக்கத்திற்கான மாதிரிகள் நான்கு வகையாக உள்ளன. 62


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

தமிழியம் என்ற பதத்தில் வெளியிடப்படும் இந்நூல் உலகில் தமிழை வாழ வைக்கும். தமிழினைப் பேண ஈழத்தமிழனின் அர்ப்பணிப்பு சொல்லிலடங்காது. ஈழத்தில் தமிழர்கள் எந்தவித கெடுபிடிகளும் இன்றி நல்வழியில் வாழ உள்ள தடங்கல்களை இந்நூல் எடுத்து இயம்புகின்றது.

ஈழத்தில் தமிழர்கள் ஆயுதத்தால் அடக்கப்பட்டனர். பொருளாதாரத்தால் அடக்கப்பட்டனர். ஆனால் ஆத்மீகத்தால் அடக்கப்படமுடியவில்லை. ஈழத்தமிழரின் உயிர்மூச்சாக, அவர்களது சுதந்திரவேட்கை என்றும் அமையும்.

வைத்தியர்.சி.யமுனானந்தா

27.07.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தமிழியம்

தமிழ் பண்பாட்டுச்சூழலினை உலக அசைவிற்கு தக்க வைக்க தமிழியம் கோட்பாடு உதவும்.

தமிழியத்திற்கான வரைவிலக்கணம்

தமிழ் + இயம் - இயம் என்றதன் பதம் பறை அல்லது கூறுதல் என்பதாகும். அதாவது தமிழை உலகிற்கு கூறுவதாக அமையும். இங்கு தமிழ் என்பது தமிழ்மொழி பேசும் இனத்தின் அடையாளங்கள் அனைத்தையும் அடக்கும்.

தமிழியம் செயற்படுதன்மை ஒரு தத்துவமாகும். இதனை கல்வியிளார்கள், அரசியல்வாதிகள், மெய்யியலாளர்கள் கைகொள்ளலாம். திட்டமிடல்களை மேற்கொள்ளலாம். இளைய தமிழ் தலைமுறையினர் தமது வாழ்விற்கான வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

தமிழியம் காப்பு என்பது தமிழ் அழிவில்லாது காக்கப்படும் வகையினைக்கூறுவதாகும். இது மொழிக்காப்பு, பண்பாட்டுக்காப்பு, வளக்காப்பு என்றவாறாக சமூகத்தில் விதைக்கப்படல் வேண்டும்.

தமிழியத்தின் பரிமாணமும் ஒழுக்கும் மொழி, இலக்கியம், சமயம், விஞ்ஞானத்தொழில்நுட்பம், மருத்துவம் இசை / கலை என்பவற்றில் அமையும் இதனால் தமிழ் அழியும் தன்மை அகலும். உலகில் தமிழர்கள் தமிழியம் என்ற பதத்தில் ஒன்றுபட்டால், தமிழிற்கு பாதுகாப்புக்கூறல் தமிழியம் என்ற சொல்லாடல் மூலமே தமிழ்மொழி பேசுபவர் இணைய முடியும்.

தமிழை எதிர்ப்பவர்களை எதிர்கொள்ளும் தன்மை இலங்கையில் வெளிப்படையானது. இந்தியாவில் மறைமுகமானது. மறைமுகதமிழ் அழிப்பினை எதிர்கொள்ளவும் வெளிப்படையான தமிழ் அழிப்பினையும் எதிர்கொள்ளவும் தமிழியம் உதவும்.

தமிழியத்தின் பரிணாமத்தினைக் கருதும்போது அவதானிக்கத்தக்கவை யாதெனில் தமிழ் அழியும் நிலையில் உருவாக்கப்பட்ட உருவகமே. தமிழியம் தமிழ் இனத்தினை தமிழர் உலகில் காக்க வேண்டியது அவசியம் அல்லாவிடின் தமிழர் வாழ்விற்கு அர்த்தம் இல்லை. தமிழை நெடிது கற்பின் தமிழில் பற்றுவரும்.

கணணிவெளியில் தமிழியத்தின் உட்படுத்துவதனால் விஞ்ஞானம், மாற்றமடையும் தொழில்நுட்ப, கலாச்சார மாற்றத்தில் தமிழ் நிலைத்து நிற்கும். தமிழ்த்தொடர்பாடல் அதிகரிக்கும்.

ஈழத்தமிழர்களுக்கு 2009ம் ஆண்டு நிகழ்ந்த அழிவில் ஐநா தவறிழைத்தமையை ஐநா நிபுணக்குழு அறிக்கையே ஆதாரப்படுத்தி உள்ளமை தமிழியத்தில் இராஜதந்திரத்தினை ஏற்படுத்தி உள்ளது. அதாவது ஐநா அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் கருத்துக்கு ஆதாரவாக அதாவது ஐநா அவையில் பாதுகாப்புச்சபை மாற்றப்படுவது மட்டுமல்ல மாறாக உலகில் நில ஆளுமையற்ற இனங்களிற்கும் விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டும் அதாவது தமிழ் மொழி பேசும் இனத்திற்கு என ஐநாவில் சிறப்பு உறுப்புரிமையினை நாம் பெறல் வேண்டும்.

இனவாதம், மதவாதம் தொடர்பான மூடக்கொள்கைகள் இன அழிப்புக்கு இட்டுச்செல்கின்றது. இதனையும் தமிழியம் மூலம் எதிர்கொள்ள வேண்டும்.

இந்திய வெளியுறவுக்கொள்கை இலங்கைத் தமிழர்களிற்கு சாதகமாக ஒருபோதும் அமையாது. எனவே இலங்கையில் தமிழின அழிப்புத்தொடரும் சாத்தியமே உள்ளது. எனவே தமிழியம் தொடர்பான விழிப்பினை தமிழிகத்தில் ஏற்படுத்தல் வேண்டும்.

இளைய தலைமுறையினருக்கு சிங்களத்தினை தமிழில் கற்பிக்கும் நடைமுறையும் சிங்களச்சொற்களை தமிழிலே குறிப்பாக பத்திரிகைகளில் எழுதுவதும் சிங்களத்தமிழ் செம்மொழியான தமிழை ஆக்கிரமிப்பதனை காணலாம். பெரும்பான்மை சிங்கள மக்கள் தமழை தமிழ் சிங்களமாக கற்கும் போது சிங்களமொழி வளம் பெறும். மாறாக ஒரே நாடு, ஒரே இனம் என்ற கோட்பாடில் தமிழ் காலப்போக்கில் அழிந்துவிடும். இதுவே தற்போது இலங்கையில் அரசின் ஆதரவுடன் நிகழ்கின்றது. எனவே தமிழியம் இதனை தடுத்துக்காக்க வேண்டும்.

தமிழியம் உலகில்

தமிழ் மொழி பாதுகாக்கப்படல்,

தமிழ் பண்பாடு பாதுகாக்கப்படல்,

தமிழ் நிலம் பாதுகாக்கபடல்,

தமிழ் வளம் பாதுகாக்கப்டல் என்பவற்றிற்காக செயற்படும்.

இதற்காக இனத்தக முரண்பாடுகள் தீர்க்கப்படல் வேண்டும். இனங்களிற்கு இடையிலான முரண்பாடு குறைக்கப்படல் வேண்டும். சர்வதேச ஆதரவு அனுசரணை தமிழியத்தினை நிலைநிறுத்துவதற்கு இருத்தல் வேண்டும்.

தனிமனிதத்தவறுகள் குறிப்பாக தீர்மானம் எடுப்பவர்களின் தவறுகள், இனத்தை பாதிக்கும், பாதித்தது இவற்றினை மாற்ற வேண்டும். திட்டமிட்ட சதி இனத்தை அழிக்கும். அழித்தது. இதனை விலத்த வேண்டும். இனரீதியான வேறுபாடுகள் ஒரு இனத்தினை அழிக்கும், அழித்தது. இதனைக் குறைக்க வேண்டும். இலங்கையில் இவ்வேறுபாடு துருவப்பட்டு உள்ளது.

இனம் ஒடுக்கப்படல் உலகின் பார்வையில் மறைக்கப்பட்டு உள்ளது. இதனை தமிழியம் கோட்பாடு விவரணப்படுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தமிழியம் ததும்பும் தமிழர்கள்

தமிழ்த்தேசியம், தமிழ்மொழி, தமிழ்க்கலாச்சாரம் என்ற நடைமுறை சமூக அரசியல் வாழ்வுக்கு பொருள்படக்கூடிய தமிழ் பதம் தமிழியம் என்பதாகும். தமிழர்களின் வாழ்வியல் மேன்பாட்டிற்கு கல்வி, மருத்துவம், குடியிருப்பு, தொழில் என்பன சிறப்பாக அமைய தமிழியம் என்ற பதத்தின் செயற்படுதன்மை உதவியாக அமையும். அடுத்து தமிழ்மொழியின் உயிர்ப்பினை தொடர்பாடல் மொழி, தொழில்நுட்ப மொழி, கலாச்சார மொழி, சமயமொழி என்பனவற்றில் பிரதிபலிக்கவும் தமிழியம் என்ற பதத்தின் செம்பணியுதவும்.

இன்று உலகில் தமிழ் பேசும் மக்கள் தமிழகத்தில் வாழ்பவர்கள், இலங்கையில் வாழ்பவர்கள் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் என புவியியல் கட்டுமானத்தில் பரிணமிக்க வேண்டியுள்ளவர்களாக உள்ளனர். இவர்களை ஒருங்கே இணைக்கும் செயற்திறன் தமிழியம் என்ற கருதுகோள் மூலமாகவே சாத்தியமாகும். தமிழ் பேசும் மக்கள் பொதுவாக குறித்த நாட்டின் தேசிய அரசியல் பாங்கு, பிரதேச அரசியல் பாங்கு என்பனவற்றினால் பாதிக்கப்படுகின்றனர். இதனை சர்வதேச அரசியல் நிலைமைகள் மேலும் பங்கப்படுத்துகின்றன.

தமிழக அரசியல் நிலைமைகளையும், ஈழத்தமிழர்களது அரசியல் நிலைமைகளையும் தமிழியம் சார்பாக அணுகும்போது கட்சி அரசியலிற்கு அப்பால் இவ்விரு பிரதேசங்களிலும் சமூக பொருளாதார மாற்றத்தை தமிழியம் சார்பாக உருவாக்க வேண்டிய செம்பணி எம்மிடையே உள்ளது.

உலகில் தமிழர்களிற்கு என்ற ஒரு சுதந்திரதேசம் இன்மையினால் தமிழியத்தின் இரராணுபலம் பூஜ்ஜியமாக உள்ளது. ஆனால் இதற்கு மாற்றீடாக தமிழியம் தொழில்நுட்பத்தில் பலமடைதல் வேண்டும். ஒரு நாட்டின் பொதுநிர்வாகத்தினை ஒட்டித்தமிழ்த்தேசியம் பேசப்படுகின்றது. இலங்கையில் தமிழ்த்தேசியம் என்பது வடக்குகிழக்கு வாழ் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை ஒட்டியதாக அமைகின்றது. ஆனால் இலங்கையில் வடக்குக்கிழக்கு தவிர்ந்த, மலையத்தமிழ் மக்களது அரசியல் சமூக பொருளாதாரப்பிரச்சினைகளும் முற்றாக தீர்க்கப்படாத தன்மையிலேயே உள்ளது. இதற்கும் தீர்வுகான தமிழியம் என்ற சொல்லாடலே மிகவும் பொருத்தமானதாக அமையும். அதே போல் தமிழகத்திலும் காவிரி நதிப் பங்கீடு தொடர்பான பிரச்சினை, மத்திய அரசின் வளப்பங்கீடுகளில் உள்ள பிறழ்வுகள் தமிழகத்தில் தமிழியத்தின் கருத்தினை வலுச்சேர்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009இலும் அதற்கு முந்தைய காலங்களிலும் ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலை குறிப்பாக இந்திய இலங்கை அரசுகளின் கூட்டான இனப்படுகொலை ஐநா உட்பட சர்வதேசத்தின் பாராமுகமும் மனித உரிமைப்பரிமாணத்தில் தமிழியத்தின் செம்பணியினை எமக்கு எடுத்துச் சொல்லுகின்றது.

அடுத்து தமிழர்களின் தலைவிதியினை குறித்து அரசுகளோ, அல்லது அதன் தலைவர்களோ, தீர்மானிப்பது தவறானது. அதே போல் அரசியல் கட்சிகள் தீர்மானிப்பதும் தவறானது. அதனாலேயே இலங்கையில் இனப்பிரச்சினையும் இந்தியாவில் நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையும் தீர்க்கப்படாது உள்ளது. இவற்றினை தீர்க்காது இருப்பதனால் தமிழினப்படுகொலை, தமிழ்மொழி அழிவு என்பனவும் தமிழர்கள் பொருளாதார ரீதியில் பின்தள்ளப்படும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே தமிழியம் செம்பணிமூலம் சமூகவியலாளர்கள், பொருளியலாளர்கள், சட்டவியலாளர்கள், கணணி தொழிநுட்ப நிபுணர்கள், தமிழ் மொழியியலாளர்கள் ஒருங்கிணைந்து நடைமுறை செயற்றினை உருவாக்கல் வேண்டும். உலகின் சிறந்த தொழில்நுட்ப விருத்தியினை தமிழியம் மிகவும் இலாவகரமாகப் பற்றிக்கொள்ளல் வேண்டும். இது தொடர்பாக ஆக்கபூர்பவமான சிந்தனை எமது இளைய தலைமுறையிடையே ஏற்படல் வேண்டும். தமிழியம் தொடர்பான சிறந்த விளக்கம் ஒவ்வொரு தமிழனிற்கும் ஏற்படல் வேண்டும். அ∴து நிகழும் கால் தமிழகத் தமிழனாயினும் சரி, ஈழத்தமிழனாயினும் சரி, புலத்தமிழனாயினும் சரி, அவன்றன் தடைகள் யாவும் உடைத்தெறியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலங்கையில் 2009ம் ஆண்டு நிகழ்ந்த இனப்படுகொலை பற்றி ஐநா விட்ட தவறுகள், ஐநாவில் தமிழ் மொழி இனத்திற்கான சிறப்புப்பிரநிதித்துவத்தின் அவசியத்தைக் எடுத்துக்கூறுகின்றது.

ஐநா நிபுணர் குழு உள்ளக அறிக்கையில் சிவிலியன் எனக்கூறுவது தவறு மாறாக அப்பாவித் தமிழ் மக்கள் எனக்குறிப்பிட்டு இருத்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டாலேயே இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என உறுதிப்படுத்தலாம். அடுத்து உள்ளக இடம் பெயர்ந்தோர் (IDP) எனக் டிகுறிப்பிட்டமை தவறு வலிந்து துரத்தப்பட்டோர் (Forced displaced People) எனக்குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.

யுத்தத்தின் போது விடுதலைப்புலிகள் அமைப்பு சீர்குலைக்கப்பட்டு விட்டது. (இந்திய, இலங்கைப் புலனாய்வுக் கட்டமைப்புகளுடாக) எனவே யுத்தத்தின் இறுதிக்கட்ட நடவடிக்கைகளுக்கு விடுதலைப்புலிகள் எனக்குற்றம் சாட்டல் தவறானது.

அதில் சமாதான உடன்படிக்கையில் இணையத்தலைமை நாடுகள் அமைத்தமை தவறு. ஐ.நா உள்ளடக்கப்படவில்லை. எனவே தமிழர்களுக்குரிய தீர்வுத்திட்டம் ஐநாவுக்கூடாகவே அணுகல் வேண்டும்.

சுனாமி நிவாரணத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை சுனாமி பொதுக்கட்டமைப்பு உருவாக்காதது தவறானது. தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை ஐநா கவனம் செலுத்தவில்லை. அதே போல் யுத்தத்திற்கு பின்பான நிவாரண அமைப்பிலும் ஐநா புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்ந்தும் தெரிந்துவிடும் தவறாகும். எனவே தமிழர்களின் அரசியல் சமூகப்புனர்வாழ்வில் ஐநா நேரடியாக அணுகல் வேண்டும்.

ஐநா மக்களுக்கு மட்டுமல்லாது தனது பணியாளர்களுக்கும் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியாது போனமை ஐநா மீது தமிழ் மக்கள் அவநம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது.

2009ம் ஆண்டு தை மாதத்தில் இருந்தே மக்கள் மீதான காட்டு மிராண்டித்தாக்குதல்களை ஐநா அறிந்தும் தொடர்ந்து 4 மாதங்களில் ஏற்பட்ட அழிவுகளை நிறுத்த முயற்சி எடுக்கவில்லை. இது பாரிய மனித அழிவினை தடுக்கத்தவறிய தன்மையாகும்.

புலிகளை கண்டித்து அறிக்கை விட்ட ஐநா இலங்கை அரசை கண்டிக்கத்தவறிவிட்டது. மேலும் யாதெனில் புலிகளின் செயல்கள் எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டமை சில அரச கூலிப்படைகளால் / கையாள்களாலேயே மேற்கொள்ளப்பட்டது. கண்ணுக்கு புலப்படக்கூடிய இடத்தில் மக்கள் கூட்டமாக அகதியாக இருந்தபோது அவர்களை நோக்கி கடுமையான எறிகணைகளை இலங்கை அரசு பிரயோகித்தது. இதனை ஐநா கண்டிக்கவில்லை. இது இனப்படுகொலையின் அம்சம் என்பதை ஐநா இன்றுவரை உணரவில்லை.

2009 அகதிகளிற்கு புனர்வாழ்வளிக்க ஐநாவிற்கும் ஏனைய நிறுவனங்களிற்குமான தடங்கள் Implied Genocide (தெரிந்து செய்யும் இனப்படுகொலை என்ற வரையறைக்குள் அடங்கும்.

UNITAR's Operational Satellite Applications Programme (UNOSAT)இல் காணக்கூடியதாக இருந்தும் இனஅழிப்பு என்ற பதத்தினை ஐநா பயன்படுத்தாமை இன்னமும் செய்யும் தவறாகும். ஐநா பாதுகாப்புச்சபையின் சில அங்கத்துவ நாடுகளிற்கு கூட இலங்கையில் தமிழருக்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவிக்காதது தவறாகும். அதே போல் இன்றும் என்ன நிகழ்கின்றது என்பதை அறிவிக்காமை தவறாகும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும் சர்வதேசத்தை தாஜா பண்ணம் எழுத்து மூலமே ஆகும். அப்பாவித் தமிழ்மக்களது காயத்திற்கும், கொலைக்கும் ஐநா அவதானிப்பும் பிரதிபலிப்பும் காணப்படவில்லை. ஐநா செயலர் இலங்கை அதிபருடன் அந்நியோன்னியமாக பிரச்சினை காலத்தில் பழகி உள்ளார். இதனை அவர் முகாம்களுக்கு உதவ உபயோகித்துள்ளார். ஆனால் கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை. சரணடைபவர்களை அணுக ஐநா தவிறவிட்டது. இது பலர் காணாமல் போவதற்கும், கொலை செய்யப்படவும் நீதிவிசாரணை இன்றித் தடுத்து வைக்கவும் ஏதுவாக அமைந்தது.

இலங்கை தொடர்பாக திட்டமிடல் இருக்கவில்லை. இதனை தற்போதாவது உருவாக்கவேண்டும். திட்டமிட்ட தவறுகள் தொடர் கொலைக்கும் வன்முறைக்கும் தமிழர் உள்ளக ஏதுவாக அமைந்தது. இதன் போது 360.000 மக்கள் பாதிக்கப்பட்டனர். இது உலக நாடுகளுக்கு வெறும் இலக்கங்களாகத் தெரிந்தாலும், ஈழத்தமிழர்களிற்கு பாரிய சமூக அழிவின் பரிமாணமேயாகும்.

இலங்கையில் ஐநாவிற்கு பாரிய தோல்வி ஏற்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதனை ஐநா எதிர்வரும் காலங்களில் ஏனைய நாடுகளில் திருத்திக்கொள்ளும். ஆனால் இலங்கையில் இன அழிப்புக்கு உட்பட்ட தமிழினத்திற்கு நிலையான அரசியல்தீர்வினை பெற ஐநா மேற்பார்வையில் இன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பிற்கு பின்பான சமூக கட்டுமானத்தை தமிழர்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

புலிகளின் அரசியல் பீடம் சரணடைவதற்கு முறையான நேரடிக்கண்காணிப்பினைச் செலுத்த ஐநா தவறிவிட்டது. இதற்கு இந்திய இராஜதந்திரமும் ஒரு காரணம். இதனால் பல இளைஞர், யுவதிகள் கொடூரமாகச் சித்திரவதைக்கு உட்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர் இதற்கும் ஐநா பொறுப்பு. இது ஒரு இனப்படுகொலையே.

இலங்கை மனிதநேய செயற்பாடுகளை இனவாத அரசியல் அர்த்தத்தில் நோக்குதல் தன்மையை கருத்தில் எடுக்க ஐநா தவறியுள்ளது. இலங்கையில் தமிழ்மக்களது இன அழிப்பில் ஆயுத உதவி வழங்கிய நாடுகள், தொழில்நுட்ப உதவி வழங்கிய நாடுகள் என்பன தமிழர்களிற்கு நீதியை வழங்குவதற்கு பக்கச்சார்பாக அமைந்து உள்ளன என்பதையும் ஐநா கவனிக்க வேண்டும்.

யுத்தத்தின் முடிவை ஐநா வரவேற்றமை, ஐநா தமிழ் இனப்படுகொலையை ஆதரித்த தன்மையைக் காட்டுகின்றது. இதற்கு ஐநா காலம் தாழ்த்தியேனும் மன்னிப்பு கோரவேண்டும். மேலும் இது ஐநா இலங்கை அரசுடன் பொறுப்புக்கூறும் தன்மையை வலியுறுத்தவில்லை. அரசியல் தீர்வு பற்றி கூறவில்லை. தவறு. இலங்கை அரசு அரசியல் புனர்வாழ்வினை ஏற்படுத்த ஐநாவின் உதவிகளை உதாசீனம் செய்தமை தொடர் இனப்படுகொலைக்கும், சிங்கள இன ஆக்கிரமிப்பிற்கும் ஏதுவானநிலையாகும். அதுவே இன்றுவரைத் தொடர்கின்றது.

அடுத்து இவ்வளவு அழிவுகளைச் செய்த இலங்கை அரசோ அன்றேல் சிங்கள மக்களோ ஐநாவின் அறிக்கையினை அலட்சியம் செய்யும் போக்கையே கொண்டுள்ளன. இது மேலும் மேலும் இன ரீதியிலான நெருக்குவாரம் தொடரவும், இன அழிப்புகள் மேற்கொள்ளவும் கட்டியம் கூறுவதாகவே அமைகின்றது. மேலும் சிங்களக்குணாம்சம் என்பது நாசிக் குணாம்சம் என்பதனை இலங்கைத்தமிழர்கள் புரிந்து வைத்துள்ளனர். ஆனால் அதனை உலகம் புரிந்து கொள்ளவில்லை. இதனை உலகிற்கு உணர்த்த எமது அரசியல் தலைவர்கள், கல்வியியளாளர்கள் முன்வரவேண்டும். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை நீதிக்கு நீதி வேண்டும் என்றே ஏங்குகின்றார்கள் அதற்காக அநீதியின் அசபை அகலவேண்டும். எனவே தமிழியம் கோட்பாட்டில் ஐநாவில் நாடல்லா சிறப்புப்பிரதிநிதித்துவத்தினை நாம் அடைய முனையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து அடக்கப்படுதல் தமிழியம் கோட்பாட்டினை வலிமைப்படுத்த வேண்டிய அவசியத்தினைக் கூறுகின்றது.

இலங்கையின் அரசியலமைப்பு சிங்கள பௌத்த பெரும்பான்மை பலத்தினால் இயக்கப்படுகின்றது. இதில் சிறுபான்மை மக்களுக்கு நேரடியான அனுகூலங்கள் குறைவு. பாராளுமன்றச் சட்டங்கள் அடிப்படையில் தமிழ் மக்களைப்புறம் தள்ளும் தன்மையதாகவே உள்ளது. இதில் முக்கியமானவை சிங்களமொழிச்சட்டம், பயங்கரவாதத்தடைச்சட்டம் என்பனவாகும்.

பயங்கரவாதத்தடைச்சட்டம் மூலம் தமிழர்கள் பயங்கரவாதிகள் என அடையாளமிட்டு, தொடர் இனப்படுகொலைகள் நடைபெற்று உள்ளன. சர்வதேச ரீதியில் குறிப்பாக தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகளாக அடையாளமிடுவதில் வெற்றி பெற்று 2009ம் ஆண்டு பாரிய மனித அவலம் ஏற்பட்டது. தற்போதும் அதே வகையிலான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் மக்கள் தொடர் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து உயிரிழப்பு, காயங்கள் என்பனவற்றிற்கு அப்பால் தொழில் வாய்ப்பினையும் இழந்து உள்ளனர். தற்போது இலங்கை சிங்கள அரச அமைச்சர்கள் சில தமிழ் வர்த்தகர்களிற்கூடாக பாரிய பொருளாதார முதலீட்டை, தனியார் வைத்தியசாலை முதல் கொண்டு வாகன விற்பனை நிலையங்கள் வரை இட்டு, தமிழ் மக்களது பணத்தினையும், உழைப்பினையும் சுரண்டும் வேலையைச் செய்கின்றனர். அடுத்து தமிழர்களது காணிகளையும் விலைக்கு வாங்குகின்றனர். அடுத்து வங்கிகள் பல தமிழரின் முதலீட்டினை மறைமுகமாக தன்வயப்படுத்துகின்றன.

இலங்கை அரசின் திட்டமிடல்கள் தமிழர்களை அடக்கும் விதமாகவே உள்ளது. இதனை வெளியுறவுக்கொள்கையில் இருந்து உள்நாட்டு அபிவிருத்தி வரைக்காணலாம். பொது நிர்வாகத்தில் மும்மொழிக்கொள்கை கடைப்பிடிப்பதாக இருந்தாலும் சிங்கள மொழியினையே பொதுவாக அமுல்படுத்தப்படுகின்றது. கல்விக் கொள்கையில் சிறுபான்மைத்தமிழருக்கு சிங்கள மொழி கற்பிப்பதனால் தமிழ் மொழியின் சிறப்பு அற்றுப்போகும் நிலை உள்ளது. பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழிக்கற்கைக்கு முக்கியத்துவம் குறைக்கப்பட்டு உள்ளது. அரசின் கைக்கூலிகளே நிர்வாகத்திலும் உயர்பதவியிலும் அமர்த்தப்பட்டு உள்ளனர். நீதித்துறையில் நீதி தமிழருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிகட்டப்பட்டே வழங்கப்படுகின்றது. குறிப்பாக தமிழ் மக்கள் மீது மனித உரிமைச்சட்டம் சிறப்பாகக் கையாளப்படுவதில்லை. பொதுவாக நிர்வாகம், கல்வி, நீதி துறைகளில் தமிழர்களின் உரிமைகளைப் புறம் தள்ளி தனிப்பட்ட சலுகைகளுக்கு தமிழ் அதிகாரிகள் முன்னிற்பது கவலைக்கரியது. இவர்கள் கூறும் மகிந்தசிந்தனை என்பது தமிழின அழிப்பின் இடக்கரடக்கல் சொல்லேயாகும்.

இலங்கைக்காவல் துறையில் 95% மேல் சிங்களவர்களே பணிபுரிவதும் அவர்கள் சிங்களமொழியிலேயே முறைப்பாடுகளை எழுவதும் தமிழ் மொழியினை அடக்கும் முறையாகக் கருத இடமுண்டு. இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை என்பனவற்றில் 99% மேல் சிங்களவர்களே உள்ளமையும் இவர்களில் 80% அதிகரிமானோர் தமிழர்களின் பாரம்பரிய இடமான வடக்குக்கிழக்கில் நிலை கொள்ள வைத்து உள்ளமையும் தமிழர்களை அடக்கும் ஒருவகைத்திட்டமே ஆகும். குறிப்பாக 2009ம் ஆண்டு தமிழினப்படுகொலைக்குப் பின்பும் இவர்களின் அதிகாரம் குறைக்கப்படாது இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் நிலை கொள்ளல் மிகவும் ஆபத்தானது இதனை சர்வதேசம் இன்னமும் கண்டு கொள்ளவில்லை. வடக்குக்கிழக்கில் இராணுவம், கடற்படை, விமானப்படை நிலைகொள்வதாயின் குறைந்தது அதில் 50% தமிழர்கள் இடம் பெறல் வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் அடக்கப்பட இந்திய வெளியுறவுக் கொள்கையும் பிரதானமான பங்கை வகிக்கின்றது. இந்தியா இலங்கை அரசினூடாக இந்து சமுத்திரத்தில் தனது ஸ்திரத்தன்மையை தக்க வைக்கின்ற வெளியுறவுக்கொள்கை மூலம் ஈழத்தமிழரை கைவிட்டு உள்ளது. இதனை அவ்வப்போது இந்தியாவில் நடைபெறும் இலங்கை இந்திய கூட்டு இராணுவப்பயிற்சிகள் எமக்கு உணர்த்தி உள்ளன. இதன் வெளிப்பாடு தமிழரை அடக்குவதேயாகும்.

அடுத்து இலங்கை அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டு உள்ள இன அழிப்புப்போரினை உள்ளநாட்டு விவகாரமாகவே சர்வதேசத்திற்கு சித்தரிக்கின்றது. இதற்கு காலத்திற்கு காலம் அமெரிக்க அரசு உட்டபட மேலைத்தேய நாடுகளில் ஆசீர்வாதமும் சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஆதரவும் கிட்டுகின்றது. மேலும் 2009 நடந்த இனப்படுகொலைகளைக் கூட ஐநா மனித உரிமைப் பேரவையில் உள்நாட்டு விவகாரமாக காலம் கடத்த நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கித் தப்பித்து உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் குறிப்பாக ஜனநாயக அரசியல் சூழல் இல்லாத நிலைமை உள்ளது. சுதந்திரமாக அரசியல் கருத்துக்களை வெளியிடமுடியாது. அரசியல் நடத்துபவர்களுக்கு இலங்கை அல்லது இந்திய புலனாய்வுக்குழுக்களின் ஆதரவு தேவை. தேர்தல்களில் ஆயுதக்குழுக்களின் அரசியலும், கறுப்பப்புணத்தைக் கொடுத்து வாக்கு வாங்கும் அரசியலும் உள்ளது. இது தமிழர்களுக்கு உரிமைக்குரல் கொடுப்போரைப் பின்னடைய வைத்து உள்ளது.

இனவாதத்தை தூபமிடும் அல்லது துணை போகும் அரசியல் கட்சிகளே சிங்களவர்கள் மத்தியில் பிரபல்யம் மிக்கது. விருப்பமுடையது. ஹெல உறுமய, ஜேவிபி என்பன இனவாதக்கட்சிகள். அரசுக்கட்டிலில் ஏறும் அல்லது ஏறமுயலும் கட்சி இனவாதத்திற்கு துணை போகும் கட்சியாகும். இவற்றின் நிகழ்ச்சி நிரல்கள் தமிழர்களை அடக்குவதாகவே எப்போதும் அமையும். மிகவும் அண்மையில் முஸ்லீம்கள் மீது எம்பிலிப்பிட்டியாவில் நடந்த சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு. தமிழரைப்பயங்கரவாதிகள் என்ற பெயரில் அமெரிக்கா, இந்தியா, உட்பட பல நாடுகளின் துணையுடன் அழித்தது போல் முஸ்லீம்களையும் சீண்டி, அல்கைடாவுடன் தொடர்பு எனக்கூறி அமெரிக்காவின் ஆதவினைக்கோர சிங்கள இனவாதிகள் குறிப்பாக ஹெல உறுமய கட்சியின் பகீரதப்பிரயத்தனம் புரிகின்றன.

அடுத்து ஆட்சி புரியும் அரசுக்கு ஊழியம் செய்யும் ஆயுதக்குழுக்கள் துணைக்கட்சிகளாக அரச இயந்திரத்தில் அமர்த்தி உள்ளனர். இவர்களின் செயற்பாடுகள் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளே அமைந்து தமிழர்கள் உரிமைகள் மழுங்கடிப்படுகின்றது. இவர்களால் தமிழர்களது முற்போக்கு இலக்குகள் காட்டிக்கொடுக்கப்படுகின்றன.

ஊடகங்கள் பல குறிப்பாக சிங்கள ஊடகங்கள் தமிழருக்கு நிகழ்ந்த அழிவுகளை உலகிற்கும் கூறவில்லை. சிங்கள மக்களுக்கும் கூறவில்லை. மாறாக இனவாத்தினையே ஊட்டி உள்ளன. அடுத்து தமிழ் ஊடகங்களிலும் பல புல்லுருவிகள் தோன்றி தமிழ் மக்களின் அவலங்களை மறைக்க அல்லது மழுங்கச் செய்ய முயலுகின்றனர். பல இணைய ஊடகங்கள் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது போல் செய்தியை வெளியிட்டு, முக்கியமான அழிவு வேலைகளில் ஈடுபடுகின்றன. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் போட்டிப் பத்திரிகைகள் கூட மக்களிற்கு அம்புலிமாமா கதையை கூறி உண்மை நிகழ்வுகளை தூரத்தள்ளுவதும், இலங்கை இராணுவத்திற்கு பயப்படுவது போல் கட்டுரைகளை எழுதி மக்களை வெருட்டுவதுமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் ஊடகங்கள் மனித உரிமைகளிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நேர்மையினைக் கடைப்பிடிக்க வேண்டும். பல செய்தி ஆசிரியர்களைக் கடமையில் வைத்திருக்க வேண்டும்.

நிர்வாக அதிகாரிகளது சர்வதிகாரம் தமிழரை கூடுதலாக அடக்குகின்றது. குறிப்பாக ஆளுனர், அரச அதிபர், பிரதேச செயலர், திணைக்கள அதிகாரிகள் என்போர் நிர்வாகச்சர்வதிகாரம் மூலம் மேல்மட்டத்தில் இருந்து கீழ்நோக்கி காரியங்களை கைக்கொள்கின்றனர். கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு உள்ளது. இவை மாற்றமடைய வேண்டும்.

இலங்கையில் இருந்து தமிழர்களை இலங்கை கடற்படையின் ஏற்பாட்டில் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பிப் பின் அவர்களை அவுஸ்திரேலிய அரசுக்கு தகவல் கொடுப்பதால், நடுக்கடலில் பிடிபடப்பண்ணி, அவுஸ்திரேலிய அரசிடம் இருந்து கடற்படைக்கான ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்கின்றது. அத்துடன் தமிழர்களை "சட்டவிரோத குடியேற்ற வாசிகள்" என்ற பிரசாரத்திற்குள் அகப்படுத்தி உலகில் தமிழனைப்பயங்கரவாதிகளாக நோக்கிய தன்மைக்கு அப்பால் சட்டவிரோத குடியேறிகள் என்ற கறுத்தப்புள்ளினை பெறவைக்கப்பட்டு உள்ளது. இதனால் சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டும் தமிழன் சிறை வைக்கப்படுவான்.

உலக அரங்கில் குறிப்பாக ஐநா சபை, தூதரங்களில் போலியான மனித உரிமை ஆர்வலர்களின் செயற்பாட்டினால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மறைக்கப்ப்படுகின்றது. இதற்காக அதிக பணம் செலவிடப்படுகின்றது.

அரசின் திட்டமிடலில் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் கைது, கடத்தல்கள், தடுப்பு வைத்தல், கொலைகள், பாலியல் துஸ்பிரயோகம் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அண்மையில் இவ்வாறான சம்பவத்தில் அரச நிகழ்ச்சி நிரலில் இயங்கும் மகிழ்வுடன் வாழும் மனநலநிபுணர் மாமா வேலை செய்து உள்ளார்.

சிங்களக்குடியேற்றங்களுக்கும் விகாரை அமைத்தலும் தமிழ் நிலங்களில் குறிப்பாக வடமாகாணத்தில் அத்து மீறி நிகழ்கின்றன. இவை யாவும் தமிழன் அடக்கப்படும் வழிவகைகளேயாகும்.

மேற்கூறிய விதங்களில் தமிழர்கள் ஈழத்தில் அடக்கப்படுகின்றனர். எனவே எங்கள் மௌனங்கள் எம்மினத்தினை நிரந்தர மௌனங்களாக மாற்றிவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. இலங்கையின் நீதித்துறையில் ஏற்பட்டுள்ள சலனத்தால் ஈழத்தமிழர் உரிமைகள் மேலும் பாதிக்கப்படும்

நீதித்துறையினை பாராளுமன்றம் கட்டுப்படுத்துவதனை சர்வதேசம் குறிப்பாக ஐநாமனித உரிமைஅவை முன்னுரிமை கொடுப்பது இலங்கைக்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும். அதாவது இலங்கையில் 2009ம் ஆண்டு நிகழ்ந்த தமிழ் இனப்படுகொலைக்கு, இலங்கை நீதித்துறை ஒரு சிறு துளியேனும் நீதிமன்ற விசாரணையை நிகழ்த்தவில்லை. இலங்கையின் நீதித்துறை, தமிழ் மக்களுக்கு சார்பாக இருந்ததில்லை. குறிப்பாக இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் சிங்களவர்களால் மேற்கொள்ளப்படும் கற்பழிப்புக்கள், கொலைகளுக்கு நீதி மறைக்கப்பட்டு உள்ளது.

அண்மையில் தமிழ் மருத்துவர் ஒருவர் சிங்கள இராணுவத்தில் பலவந்தமாக பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்க பெற்றோருக்கு துணையாக நின்றபோது பயங்கரவாதச்சட்டமன்றத்தில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளார். ஆனால் 2வருடங்களிற்கு முன் வேலணையில் சிங்கள மருத்துவர் ஒருவர் பொது சுகாதார மாதுவினை அடித்துக் கொலை செய்யப்பட்டபோது அவரை விடுவித்து நீதி வழங்கி உள்ளது.

அடுத்து இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக அரசினால் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு இணைப்பினை உயர் நீதிமன்றமே இரத்துச் செய்தது.

வடக்கு கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு சர்வதேசத்தின் உதவிகள் செல்லாமல் உயர் நீதி மன்றமே தடை செய்தது. எனவே தமிழ் மக்களிற்கு பக்கச் சார்பாக நீதியை வழங்கிய இலங்கை நீதித்துறைக்கு உள்ள அதிகாரத்தினை ஜனநாயக வழியில் குறைக்கும் போது மனித உரிமை அமைப்புக்கள் அதனை எதிர்ப்பது தமிழ் மக்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அங்கிகரிப்பதாகவே அமையும். இலங்கை அரசு பாராளுமன்றத்திலும் இனவாத நோக்கிலேயே இயங்குகின்றது. அதனை நாம் அங்கிகரிக்கவில்லை. ஆனால் இலங்கையில் சட்டம், நீதி, நிர்வாகம் மூன்றும் சிறுபான்மையினருக்குச் சார்பாக இல்லை. ஆனால் தற்போதுள்ள கொந்தளிப்பு, தமிழர்களிற்கு இழைக்கப்படும் அநீதிகளை மழுங்கடித்துவிடும். குறிப்பாக ஜெனிவா இலங்கையில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பான விவாத நேரத்தினையும் அமெரிக்க இராஜங்க அமைச்சில் இலங்கை யுத்தக்குற்ற விவரங்களிற்கு எடுக்கும் நேரத்தினையும் இலங்கை நீதியரசின் விவாதம் விழுங்கிவிடும். எத்தனையோ ஆயிரக்கணக்கான தமிழர்களின் இறப்புக்கள், பாதிப்புக்கள் பற்றிய மனித நேயத்தை விட, ஒரு அதிகாரச்சிக்கலுக்கு உலகம் முதலிடம் கொடுக்கின்றது. இவ்விவகாரம் தமிழர்களிற்கு, தமது இராஜதந்திரஇருப்பு எவ்வளவு தூரம் உலகில் பின்னிற்கு உள்ளதைத் தெளிவாகக்காட்டியள்ளது. தமிழியம் கோட்பாடு தமிழ் இராஜதந்திரத்தினை சிறப்பு நிலைக்கு கொண்டு வரல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. இலங்கையில் இன முரண்பாடு பற்றி 125 வருடங்களுக்கான ஆய்வு.

இன முரண்பாடானது அன்றாட மொழியில் நாம் விளங்கிக் கொள்வதைப் போல, மனித வாழ்வில் தவிர்க்க முடியாத அம்சமாகும். சகமனித இனங்களுடனான பிணக்குகளில் ஒற்றுமை, உடன்பாடு, ஒருமைப்பாடு என்பவை காணப்படுவது போலவே, உடன்பாடற்றதன்மை, வாதங்கள், என்பவற்றையும் காணலாம். இத்தகைய மகிழ்ச்சியற்ற எதிர்நிலையான உறவுகளை முரண்பாடாக நாம் விளங்கிக்கொள்கிறோம். முரண்பாட்டுத் தீர்வுகள், விவாதங்கள், அச்சுறுத்தல்கள், தவிர்ப்புக்கள் ஆகிய நிலைமைகளுடன் தொடர்புபட்ட நிலையில் நிச்சயமான திறமைகள் சிலவற்றை நாம் கொண்டுள்ளோம். வேறுபாடுகளின் இருப்புக்களும், அவ்வேறுபாடுகளுடன் தொடர்புகொள்ளும் ஆற்றல்களும் எமது சமூக வாழ்வினை அடையாளப்படுத்துகின்ற பரிமாணங்களாகும்.

இன முரண்பாட்டிற்கான காரணங்கள்

- கட்டமைப்பு அம்சங்கள்
- அரசியல் அம்சங்கள்
    1. பாரபட்சமான அரசியல் நிறுவனங்கள்
    2. பிரத்தியேகமான தேசிய கருத்தியல்கள்
    3. குழுக்களுக்கிடையிலான அரசியல்
    4. உயர் குழாம் அரசியல்
- பொருளாதார, சமூக அம்சங்கள்
- கலாசார அம்சங்கள் அல்லது விளங்கிக்கொள்ளல் அம்சங்கள்

இன முரண்பாடு பரிணமிக்கும் வகைகள்

1. நபருக்குள்ளேயான முண்பாடு (Intra Personal Conflict)
2. நபர்களுக்கிடையிலான முரண்பாடு (Intra Personal Conflict)
3. உணர்வு சார்ந்த முரண்பாடு (Emotional Conflict)
4. குழு முரண்பாடு (Group Conflict)
5. நிறுவன ரீதியான முரண்பாடு (Organizational Conflict)
6. சமுதாய முரண்பாடு (Community Conflict)
7. அரசுக்குள்ளேயான முரண்பாடு (Intra – State Conflict)
8. சர்வதேச முரண்பாடு (International Conflict)
9. சுற்றாடல் வள முரண்பாடு (Environmental Resource Conflict)
10. சமூகங்களுக்கிடையிலான முரண்பாடு (Inter Societal Conflict)
11. சமூகங்களுக்குள்ளேயான முரண்பாடு (Inter Societal Conflict)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கருத்தியல் சார்ந்த முரண்பாடு (Ideological Conflict)
13. இராஜதந்திர முரண்பாடு (Diplomatic Conflict)
14. பொருளாதார முரண்பாடு (Economic Conflict)
15. இராணுவ முரண்பாடு (Military Conflict)

இன முரண்பாட்டின் அடிப்படையில் சமூகத்தில் ஏற்படும் வன்முறைகள்.

1. நேரடியான வன்முறை முரண்பாடுகள் மிக மோசமாக உக்கிரமடையும் சந்தர்ப்பத்தில் கூடியளவு வன்முறைகள் இடம்பெறுதைக் காணலாம். இதில் யுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்களைவ விட, பொதுப்பிரஜைகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
2. கட்டமைக்கப்பட்ட வன்முறைகள் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாரபட்சம் காட்டப்படல், அரசியல் யாப்பில் இனங்களுக்கிடையில் சமத்துவம் பேணப்படாமை போன்றவற்றையும், அதேபோன்று வீடுகளில் இடம்பெறும் வன்முறைகள் (வறுமை, குடிப்பழக்கம், பெண்களுக்கெதிரான வன்முறை) போன்றவற்றை கட்டமைக்கப்பட்ட வன்முறை எனலாம்.
3. பண்பாடு சார்ந்த வன்முறை பரஸ்பர புரிந்துணர்வு இன்மை, வன்முறை சார்ந்த தன்மைகளை பண்பாடு சார்ந்த வன்முறை எனலாம்.

விவரணப்படுத்தல் வன்முறையானது பரிணாமங்களோடு செயற்படுகின்றன.

1. தனியார் பரிமாணம் ( Personal Dimensions)
2. உறவுப்பரிமாணம் (Relational Dimensions)
3. அமைப்புப் பரிமாணம் (Structural Dimensions)
4. கலாசாரப் பரிமாணம் (Cultural Dimensions)

இன முரண்பாட்டினைத் தடுப்பதற்கான சர்வதேச சமூகத்தின் கொள்கையானது இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலே இருக்கின்றது. இத்தகைய மட்டுப்பாடுகள் பல்தரப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்ற பனிப்போரின் பட்டமைப்பு ரீதியான சட்டத்தன்மையிலிருந்து உதயமானதாகும். உள்வாரியான ஆயுத முரண்பாடுகளின் அதகரித்த எண்ணிக்கையானது முரண்பாட்டுத்தடுப்பில் அரசுகளின் பங்கிளைக் குறைக்கின்றன. அடக்குமுறை சார்ந்த இராஜதந்திரம், தடுத்து வைத்தல் போன்ற அரசுகளின் மரபு சார்ந்த கொள்கைக் கருவிகள் இந்நோக்கத்திற்காக அவற்றின் பயன்பாட்டில் பெருமளவினை இழந்திருந்தன. முரண்பாட்டுத்தடுப்புத் துறையில் அரசசார்பற்ற அமைப்புக்கள் ஐக்கியநாடுகள் சபை அல்லது இறைமையுள்ள அரசுகளின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற வேளையில், அவை அந்தச் செயற்பாடுகளைப் பயனுள்ள வகையில் நிறைவேற்ற முடியும்.

பல்சுவட்டு இராஜதந்திரத்தின் அவசியம்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்ரான முரண்பாடு பற்றிய ஒரு பகுப்பாய்வானது, முரண்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அநேகமான உத்தியோக பூர்வ முயற்சிகள் மிகப்பிந்தியே நிகழ்கின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய விடயங்களில் உண்மையாக எடுக்கப்பட்ட தடுப்பு சார்ந்த அளவீடுகளின் எண்ணிக்கையானது, ஒரு நோக்கமுடைய முரண்பாட்டுக் கட்டுப்பாடு நுட்பத்தின் அடைவில் எடுக்கப்படக்கூடிய அளவீடுகளுக்கு எதிரிடையான விகிதாரசாரத்திலேயே உள்ளது. இராஜதந்திர செயற்பாடானது, ஒரு நேர்நிலையான திசையில் செல்வாக்குச் செலுத்துகின்ற நிகழ்வுகளில் உண்மையான வாய்ப்புக்கள் இருந்ததென சிறப்பானதாக அமைந்திருக்கவில்லை. தடுப்பு சார்ந்த கொள்கைகளில் வினைத்திறனானது முரண்பாடடுத்தீர்விற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பினால் முன்னேற்றப்பட முடியும். பல்சுவட்டு இராஜதந்திரம் என்னும் பதமானது, ஒன்பத செயற்பாட்டாளர் வகைப்பாடுகள் அல்லது சுவடுகளை வேறுபடுத்துகின்ற சமாதான உருவாக்க முயற்சிகளிற்காக உருவாக்கப்படடதாகும். அச்சுவடுகளான

1. அரசாங்கம்
2. புலமைசார் அமைப்புக்கள்
3. வியாபார சமுதாயம்
4. தேவாலயங்கள்
5. ஊடகங்கள்
6. தனிப்பட்ட குடிகள்
7. பயிற்சி மற்றும் கல்விசார் நிறுவனங்கள்
8. செயற்பாட்டாளர்கள்
9. நிதி அளிக்கும் அமைப்புகள்.

சிக்கலான நடைமுறையான முரண்பாட்டு மத்தியஸ்தத்தில் பின்வரும் அம்சங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

16. நடுநிலைமை
17. வசதிசெய்தல் அல்லது உதவுதல்
18. பக்குவமான நிலைமைகள்
19. விட்டுக்கொடுப்பு

அண்மைய கருத்துக்கள் இவை இலங்கையில் ஏற்படுத்த வேண்டியவை

சிங்கள – பௌத்த உணர்வின் சமீபகாலத் தன்மையை ஆராய்வதற்கு 1970களிலிருந்து தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களும் வெளியிடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரங்களும் முக்கிய சான்றுகளாக அமையும். இத்தகைய பிரசுரங்களில் அடிக்கடி கையாளப்படும் கருத்துக்கள் சிங்கள பௌத்தர்களும் தமிழரல்லாத ஏனைய சிறுபான்மையினரும் முன்னைய கால கட்டத்தில் முரண்பட்டுக்கொண்டபோது கையாளப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரசுரங்களிற் காணப்படும் அடிக்கருத்துக்களைப் பொதுவாக பின்வருமாறு பாகுபடுத்தலாம்

1. சிங்கள இனமே முதன்மையாதும் உயர்ந்த இனமுமாகும் என்ற கருத்தோட்டம். சிங்கள இனமே இலங்கைத்தீவின் உண்மையான ஆதிக்குடிகள் என்ற கருத்துடனும் வங்கத்திலிருந்து குடி பெயர்ந்து வந்த "ஆரியரே" சிங்களவர் என்ற ஐதீகத்துடனம் இக்கருத்தோட்டம் இணைந்துள்ளது. 1980களில் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

> சிங்கள இனம் இரண்டாயித்தைந்தாறு வருடங்களுக்கு மேற்பட்ட சான்றாதரமுள்ள தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டது. இலங்கைச் சிங்களவரின் வரலாற்றை விடப் பழைமையான வரலாறு வேறொன்றுமில்லை. இலங்கை சிங்களவருக்குரியது என்ற கருத்து வெறும் வாய்மொழி மரபாக வழங்கும் ஐதீகங்களையோ கட்டுக்கதைகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. பண்டைய குகைச்சாதனங்கள், மாபெரும் பௌத்த தூபிகள், விகாரைகள், பாறைகளிற் செதுக்கப்பட்ட புத்த பெருமானின் உருவச்சிலைகள், மிகப்பெரிய குளங்கள், நீர்ப்பாசன முறைமைகள் யாவும் சிங்கள இனத்தினதும் சிங்கள தேசத்தினதும் பாரம்பரியத்துக்கு அசைக்க முடியாத சான்றுகளாகும்.

சிங்களவருக்கு தாய் நாடு என்று கூறுவதற்கு இலங்கையை விட வேறு நாடு எதுவும் இல்லை. இந்திய தொழிற்சங்கத் தலைவர்கள் "போரா" வியாபாரிகள், பெரும்பான்மையான தமிழ்த் தொழிலாளர் யாவரும் இலங்கையை ஒரு தங்கச் சுரங்கமாகவே கருதுகின்றனர். இங்கிருந்து பணத்தை உழைத்து இந்தியாவில் தமது பிள்ளைகள், உறவினர் பெயரில் பெரிய வீடுகளையும் நிலங்களையும் வாங்குகின்றனர். இவர்கள் யாவரும் இலங்கையில் ஒரு காலும், இந்தியாவில் ஒரு காலுமாக வாழ்கின்றனர். இலங்கை தங்கச் சுரங்கமாக இருக்கிறது என்பதில் மட்டும் தான் இவர்களுக்கு அக்கறை. இவர்களுக்கு சிங்கள கலாசாரம், சிங்களமொழி, பௌத்த மத் என்பவற்றின் மீதோ பாரம்பரியமான சிங்கள மக்களின் மீதோ எத்தகைய அனுதாபமும் அக்கறையும் இல்லை.

பௌத்த சமயத்தின் பாதுகாவலர் சிங்களவரே என்பது மூன்றாவது கருத்தோட்டமாகும். பௌத்தத்தை பௌத்தரல்லாதோரிடமிருந்து காப்பாற்ற வேண்டுவதும், பௌத்த சின்னங்களையும், பௌத்த சமயத்தையம் பேண தர்மயுத்தம் செய்யும்படி அண்மைக்காலங்களில் கோரிக்கை விடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தின் சுதந்திரத்திற்காகவும் மதத்தின் மகத்துவத்திற்காகவும் தமது உயிரை அர்ப்பணித்த எமது முன்னோர்களும், எதிர்காலச் சந்ததியினரும் எமது மௌனத்திற்காக எம்மைச் சபிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்வேளையாவது இனத்தின் பெயரால், எமது முன்னோரின் பெயரால், எமது எதிர் காலச் சந்ததியின் பெயரால் இன்றைய நிலைமை பற்றி விழிப்படைவோம்.

இந்தச் சிங்களவரல்லாத சிறுபான்மையினர், தமது சொந்த மண்ணின் மீது சிங்கள மக்களக்குரிய உரிமையை மிகவும் அநீதியான முறையில் அழிக்க முயல்வது மாத்திரமல்லாது ஐயமற்ற அப்பாவிச் சிங்கள மக்களுக்கும் வேறு பல அநீதிகளையும் அழைத்து வருகின்றனர்.

1. கிறிஸ்தவருக்கும் பௌத்தருக்கும் இடையில் பொது மேடையில் விவாதங்கள் நடந்தன. 1873ம் ஆண்டு பாணந்துறையில் மிகெத்துவத்த குணானந்த தேரோ என்னும் பௌத்த பிக்குடேவிட் டிசில்வா என்ற வெஸ்லியன் மத குருவுடன் இரு மதங்களின் சிறப்புகள் பற்றி விவாதம் நடத்தி கிறிஸ்தவர் பிரச்சாரம் பொய்யானது எனக்காட்ட முயன்றார். குணானந்தாவின் பேச்சுத் திறமையும் பைபிள் அறிவும் இலக்கியச் சிந்தனையும் விவாதப் போரில் பௌத்தர்களிடையே தம் மதச்சிறப்புப் பற்றி நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. 19ஆம் நூற்றாண்டில் ஒரு கிறிஸ்தவ மதகுரு பின்வருமாறு எழுதினார்.

நான் கண்டவற்றில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சம்பவம் இதுவாகும். முக்களிடையே தமது மதம் பற்றி கொண்டிருந்த அதீத ஆர்வத்தை ஆணித்தரமாக இது நிரூபித்தது. இது அக்காலகட்டத்தின் அடையாளங்களில் ஒன்று.

2. துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள், பௌத்தர்களைக் கதா நாயர்களாகவும், கிறிஸ்தவரை வில்லன்களாகவும் கொண்ட நாவல்கள் என்பவற்றின் மூலம் கிறிஸ்தவருக்கும் எதிரான மக்கள் எதிர்ப்பு வளர்க்கப்பட்டது. கிறிஸ்தவம் கேலிக்குள்ளானது. மிசனரிமார் "கீழ்த்தர, மூட நம்பிக்கைகளைக் கற்பிக்கும், எதிரிகளாக"க் கூறப்பட்டனர். அத்துடன் "அவர்கள் எமது தெருக்களில் நோய் பரப்பும் மூடப் போதகர்கள்" எனவும் குற்றம் சாட்டப்பட்டனர்.
3. பௌத்த ஸ்தாபனங்களது தோற்றத்தால் பௌத்த கல்வியும் பௌத்தமும் முன்னேற்றமடைந்தன. குறிப்பாக 1880இல் கேணல் ஒல்கோட்டும், ஹெலனா பிளவட்ஸ்கியும் இலங்கை வந்து பௌத்த தியோசொபிகல் சங்கத்தை உருவாக்கியமை பௌத்த கல்வியின் முன்னேற்றத்துக்கு நன்கு உதவியது. இக்காலத்தில் பிரித்தானியத் தீவிரவாதிகளினதும் சுதந்திர சிந்தனையாளர்களினதும் கருத்துக்கள் இலங்கையில் பரவின. 1883இல் வெளியான 'சிலோன் பிரீ திங்கர் என்ற பத்திரிகையின் முதலாவது இதழில் "மிசனரிக் கல்வியின் தீய விளைவுகள்' எனும் கட்டுரையம் இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ எதிர்ப்பியக்கத்தின் அடுத்த கட்டத்துக்கு 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், அனாகரிக தாம்பாலா, வலிசிங்கஹரிச்சந்திரா ஆகியோர் தலைமை தாங்கினர். தர்மபாலாவின் (1864-1933) தந்தை புறக்கோட்டையில் வீட்டுத்தளபாட வியாபாரியாக இருந்தார்.

பௌத்தர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் எதிரான நடவடிக்கைகளை பற்றி ஆராய்வதற்காக பௌத்த நிறுவனங்களால் ஒரு பௌத்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஹட்டி (கன்னி மேரி பற்றிய உண்மை)போன்ற கீழ்தரமான பிரசுரங்கள் மீள வெளியிடப்பட்டன. சமீப வருடங்களில் ஏனைய சிறுபான்மையினருக்கு எதிராக மக்களுடைய கவனம் திருப்பப்பட்டபோதும் கிறிஸ்தவ எதிர்ப்புணர்வு சிங்கள பௌத்த மக்களின் பிரக்ஞையில் இன்றும் உள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட ஜனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு வர்த்தகத்தில் நிலவிய போட்டி ஒரு முக்கிய அம்சமாகும். 1875-1900 காலகட்டத்தில் பிரித்தானிய,வட,தென்னிந்திய முதலீடுகள் இலங்கையின் காலனித்துவப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தின. இலங்கையில் சிங்கள, தமிழ் முஸ்லீம் மக்களிடையே பூர்ஷ்வா வகுப்பொன்றும் எழுச்சியுற்றது. முஸ்லிம் பூர்ஷவாக்கள் வியாபாரத்திலேயே முதன்மையாக ஈடுபட்டனர். தமிழ் பூர்ஷவாக்கள் தோட்டச்செய்கை, உத்தியோகம் என்பவற்றிலிருந்து பணத்தைப் பெற்றனர்.

1880இல் புறக்கோட்டை வர்த்தகத்தில் 86 செட்டியார் கம்பனிகளும், 64 முஸ்லீம் கம்பனிகளும், முதன்மை பெற்றன. ஏச்.டொன்கரோலிஸ் (தளபாடங்கள்), என்.எஸ்.பெர்னான்டோ (உபகரணங்கள்) போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய சிங்கள வியாபாரிகளே காணப்பட்டனர். 1890இல் குஜராத்தைச் சேர்ந்த புதிய முஸ்லிம் வர்த்தகக் குழுவினர் -போரா,கோஷா,மேமன் போன்றோர் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இடம் பெற்றனர். இவர்களே புதிய வியாபார முக்கியஸ்தர்களாக மாறி பிரித்தானியர் கூட்டுப் பங்குத்தாரர்களாகவும் அமைந்தனர்.

வியாபாரத்தில் காணப்பட்ட இத்தகைய அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான வெறுப்பு சிங்கள வியாபாரிகளிடமும் வெளிப்பட்டது. இத்தகைய பகைமை அனகாரிக தர்மபாலாவினால் 'பம்பாய்வணிகர்கள்', தென்னிந்திய தெருப் பொறுக்கியர்'என வர்ணிக்கப்பட்ட சகலருக்கும் எதிராக இருந்தது. ஆயினும் பகைமை குறிப்பாக நகர, கிராமப் பகுதிகள் எங்கும் பரந்து காணப்பட்ட, வியாபரிகளுக்கு எதிரானதாகவே அமைந்தது. சிங்கள, முஸ்லீம் வியாபாரிகள், கடைக்காரர் ஆகியோருக்கு இடையில் தீவிரப்போட்டி நிலவியது மாத்திரமின்றி 1915 இல் நிலவிய போர்க்காலப் பற்றாக்குறை, பணவீக்கம் ஆகியவற்றால் அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரித்தபோது முஸ்லிம் கடைக்காரருக்கு எதிராக நுகர்வோரின் பகையும் தூண்டிவிடப்பட்டது. இதே நிலையே தற்போதைய பொருளாதார தாழ்வு நிலையில் முஸ்லீம்களுக்கு எதிராக பல கலகங்களை சிங்கள உறுமய, பொதுபலசேனா என்பன நிகழ்த்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 'அந்நிய வர்த்தகர்கள்' 'மண்ணின் மைந்தர்களுக்கு' எதிரிகள் என்றகருத்துச் சிங்களப் பத்திரிகை உலகில் பிரபலமாக்கப்பட்டது. இக்கருத்தின் முக்கிய பிரசாரங்களில் ஒருவர்அனகாரிக தர்மபாலா. அவரது தகப்பனாகிய எச்.டொன் கரோலிஸ் புறக்கோட்டையில் கடை வைத்திருந்த மிகச் சில சிங்களவர்களுள் ஒருவர். புல சிங்கள எழுத்தாளர், நாடகாசிரியர், பத்திரிகையாளர், பௌத்த பிக்குகள் ஆகியோர் சிங்கள அரசர்களின் வீரதீரச் செயல்கள் பற்றியும் அந்நியப் படையெடுப்புகளை வெற்றி கொண்டமையை நினைவு கூர்ந்தும் அத்துடன் அந்நிய வியாபாரிகளைக் கண்டித்தும் அவர்களது கடைகளைப் பகி'கரிக்கும்படியும் சிங்களவரை வற்புறுத்தியும் எழுதினர்.

இக்காலத்தில் தர்மபாலாவின் கண்டனங்கள் குறிப்பாக முஸ்லிம் வியாபாரிகளுக்கு எதிராகவே அமைந்தன. 1915இல் அவர் எழுதினார்.

'அந்நியரான முகமதியர் வழிமுறைகளால் யூதர்கள் போன்று செல்வந்தராய் மாறினர். 2358 வருடங்களாக அந்நிய முற்றுகைகளில் இருந்து நாட்டைக் காப்பற்காக இரத்தத்தை ஆறு போல் பெருக்கிய மூதாதையரைக் கொண்ட மண்ணின்மைந்தரான சிங்களவர் பிரித்தானியரின் கண்களில் நாடோடிகளாய்த்தெரிகின்றனர். தென்னிந்திய முகமதியர் இலங்கைக்கு வந்து, வியாபாரத்தில் எத்தகைய அனுபவமுற்ற,உதாசீனம் செய்யப்பட்ட கிராமவாசியைக் காண்கின்றான். இதன் விளைவு முகமதியன் முன்னேறுகிறான். மண்ணின் மைந்தன் பின்தள்ளப்படுகிறான்.

சிங்கள குட்டி பூர்'வாக்களின் வேறு எழுத்துக்களுக்கும் சிங்களவரைத் தூண்டிவிடுவனவாக அமைந்தன. 'சிங்களஜாதி' என்ற பத்திரிகை ஆசிரியராக இருந்த பியதாச சிறிசேன எனும் நாவலாசிரியர் 'கரையோர முஸ்லீம்களிடமும் கொச்சிக்காரரிடமும் அந்நியரிடமும் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்க வேண்டாம் எனச் சிங்களவரை வற்புறுத்தினார். சிங்கள தினசரியான 'லக்மின' கரையோர முஸ்லிம்களைப் பற்றிப் பின்வருமாறு கூறிது: வெறுக்கத்தக்க இக்கும்பலை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்குத் தகுந்த திட்டம் தீட்டப்படுதல் வேண்டும்.

'பிரித்தானியருக்கு ஜேர்மனியர் எவ்வாறோ சிங்களவருக்கு முஸ்லிம்கள் அவ்வாறே. முகமதியர் சிங்களவருக்கு சமயத்தாலும், இனத்தாலும், மொழியாலும் அந்நியர், பௌத்த சமயம் இல்லாவிடின்மரணமே சிங்களவர் வேண்டுவர். பிரித்தானிய உத்தியோகத்தர் சிங்களவரைச்சுடலாம், தூக்கிலிடலாம், சிறைப்பிடிக்கலாம். ஆனால் எப்போதும் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பகைமை உறவே உள்ளது. அந்நியரால் தமக்கு இழைக்கப்படும் அவமானங்களை இனிமேலும் பொறுக்க முடியாது என்பதை அமைதிமிக்க சிங்களவர் இறுதியில் உணர்ந்து விட்டனர். முழுத்தேசமும் முஸ்லிம்களுக்கெதிராக எழுச்சியுற்றுவிட்டது. இதற்குப் பொருளாதாரமும், ஆன்மீகமுமே காரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய வியாபாரிகள்' மேல் பமைமை, 'மண்ணின் மைந்தர்கள்' மேலுள்ள அக்கறை என்பனவாகும். இவற்றுடன் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் மீண்டும் மீண்டும் குரலெழுப்பப்பட்ட என்ற பத்திரிகைலும் கூறியபடி 'சிங்களவர் தனித்து ஒதுக்கப்பட்டு இனவெறிப் பிரச்சாரத்திற்கு இடம் தராது மத, சாதி, இன பேதங்களை மறந்து பொருளாதாரக் கோரிக்கைகள் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களில் தொழிலாளர் ஒன்றிணைந்து போராடினர்.

1893 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் திகதி எச்.டபிள்யூ.கேவ் கொம்பனியைச் சேர்ந்த 60 அச்சுத் தொழிலாளர்கள் தமது சம்பளம் தாமதம் ஆனதற்காக 5 நாட்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தத்தின் போது கொழும்பில் பெரும்பான்மையான செய்திப் பத்திரிகைகளையும் வேறு அச்சகங்களையும் சேர்ந்த சுமார் 500 தொழிலாளர்களைக் கொண்ட பொதுக்கூட்டத்தில் இலங்கையின் முதலாவது தொழிற்சங்கமான இலங்கை அச்சுத் தொழிலாளர்சங்கம் நிறுவப்பட்டது.

பொன்னம்பலம் அருணாசலம் அரசியல், சமூக சீர்திருத்தத்தில் மாத்திரமன்றி இலங்கையின் தொழிலாளர் இயக்கத்திற்கும் முன்னோடியாவார். இவர் காலனித்துவ சிவில் சேவையின் மிகச் சிறந்த அங்கத்தவருள் ஒருவர் மாத்திரமன்றி தியோசபிஸ்டுகள், பிரித்தானிய தீவிரவாதிகள், சோசலிஸ்டுகள், பிரித்தானிய தொழிற்கட்சியினர் ஆகியோருடனும் பரவலான தொடர்பு கொண்டிருந்தார். அக்காலத்து மிதவாதத் தலைவர்களைப் போலல்லாது பல பிரச்சினைகள் தொடர்பாக தீவிரமான நிலைப்பாட்டை கொண்டிருந்தார். குறிப்பாகத் தொழிலாளரைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பாகவும் சுயாட்சி, சர்வசன வாக்குரிமை முதலியவற்றை ஆதரித்ததிலும்தனது சகபாடிகளைவிடப் பலபடி முன்னேறியிருந்தார். இலங்கையின் காலனித்துவ விடுதலைப்போராட்டத்தின் முன்னோடி சேர்.பொன்அருணாசலமே ஆகும்.

1920களில் இன ஒற்றுமையை வலியுறுத்திய இலங்கைத் தொழிலாளர் சங்கத்தலைவர் ஏ.ஈ.குணசிங்காவே தமது சங்கத்தினூடாக மலையாளி எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி முடித்தார். இதுவே முப்பதுகளின் பிற்கூற்றில் உக்கிரமடைந்தது. வர்க்க உணர்வு வேகமாக வீழ்ச்சியடையத்தொடங்கியது.

"இலங்கையில் மரபு வழிவந்த நிரந்தரவாசிகளான சிங்களவரும் பிறநிலையான குடிகளும் வேலையின்மையால் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். ஆனால் ஆயிரக்கணக்கான மலையாளிகள் வேலைகளைப் பெற்று வருகின்றனர்.

1930களில் இலங்கையில் ஏற்பட்ட வகுப்புவாத வெறி ஜெர்மனியிலும் இத்தாலியிலும் ஏற்பட்ட பாசிச வெறியோடு சமகாலத்தில் நிகழ்ந்ததுஇ உள்ளூரில் வெளிவந்த பல செய்தி ஏடுகள் ஹிட்லர், முசோலினி ஆகியோரது வெளிநாட்டு கொள்கைகளுக்கு அதரவான விவரங்களை பல தேசிய வாதிகளும் தொழிற்சங்கத்தலைவர்களும் சிங்களவர் "ஆரியர்" என்ற பௌராணிக வரலாற்று மாயையால் புத்துணர்வு பெற்றநிலையில் ஜேர்மனியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலியிலும் பயன்படுத்தப்பட்ட மொழியும் பாணியும் தமது சொந்தப் பிரசாரத்துக்கும் பயன்படும் என்று கண்டனர். ஹிட்லர் செய்த இன அழிப்பினையே சிங்களவரும் 2009இல் முல்லைத்தீவில் நிகழ்த்தினர்.

1939இல் ஏ.ஈ.குணசிங்கா கொழும்பில் சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நிகழ்த்தினார். ஆதில் "சிங்களவராகிய நாம் அனைவரும் ஒரே கொடியின் கீழ் அணி திரள வேண்டும்" என்று பிரகடனம் செய்தார். இந் நிகழ்ச்சியில் விவசாயத்துறை அமைச்சர் டி.எஸ்.சேனநாயக்கா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். அவருடைய பேச்சு சிங்கள மக்களைத் தூண்டிவிடும் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தது.

(சிங்களவராகிய) எம் உடலில் ஓடுவது ஒரே குருதி. நாம் ஒரே இனத்தவர், நாம் தனிச் சிறப்புள்ள மக்கள், 5500 ஆண்டுகளுக்குத் தன் மதம் நிலைக்குமென்று புத்தர் கூறினார். புத்தமதத்தின் பாதுகாவலர்கள் என்ற முறையில் நாமும் அதே அளவு காலம் நிலைத்து வாழ்வோம்.

1920களில் எழுப்பப்பட்ட 'ஆரிய இனம்' என்பது அப்போது தொழிலாளர்தலைவர்களிடம் செல்வாக்குப்பெறவில்லை. ஆனால் இக்காலகட்டத்தில் அது அவர்களாலும் புத்துயிர் பெறப்பட்டு ஐரோப்பாவில் வளர்ந்து வந்த பாஸிசத்தினால் மேலும் வளமாக்கப்பட்டது.

சிங்களவர் துரதிஷ்டம் பிடித்த சமூகத்தினர்.... ஆவர்களுடைய தாராள மனப்பான்மை மறக்கப்பட்டு தவறாக விளக்கப்பட்டுள்ளார். மற்றவர்களின் நன்மைக்காகத் தம்மை ஒறுப்பதற்குச் சம்மதிக்கும் சிங்களவர் போன்று வேறு ஒரு சமூகம் இருக்கும் என நான் எண்ணவில்லை. இந்தியர்களுக்கு ஒரு பெரிய நாடு உள்ளது. எங்களுக்கு இச்சிறு துண்டு நிலமே உள்ளது. இந்த நாடு எங்களுக்கு வேண்டும்.

நான் இந்தச் சவாலை விடுக்கிறேன். அவர்கள் கிராமங்களுக்குப் போய் தமது மேடைப் பிரசார்ததில் "என்னைச் சட்டசபைக்கு அனுப்புங்கள். நான் இலங்கையர்களக்கும் இலங்கையர் அல்லாதவர்களுக்கும் இடையே எந்த வேறுபாடும் காட்டமாட்டேன்.

கொழும்பில் வசிக்கும் இந்தியரை விட தோட்டத்துக்கூலிக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன்... இந்தியத் தொழிலாளி காலையில் 6 மணிக்கு வேலைக்குப் போய் மாலை 6 மணிக்கே தனது கூலி லைன்களுக்கு திருப்புகிறார். இத்தீவில் நிகழ்வன பற்றி அவனுக்கு என்ன தெரியும்? எனவே அரசியல் விடயங்களில் வாக்களிக்கும் தகைமை அவனுக்கு இல்லை என்றே கூறுவேன்.

சட்டசபை அங்கத்தவர்களுள் புறநடையாக இருந்தவர் தொழிற்கட்சியின் அங்கத்தவரான சி.எச்.சற்.பெர்னான்டோ என்பவர். நகரத் தொழிலாளர் இயக்கத்துக்கு இவர் பத்து வருடகாலமாக ஆதரவு அளித்தவர். "செயலிழக்கச்செய்வது" பற்றிய எச்சரிக்கைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை அவர் நிராகரித்தார். இவை உண்மையற்றவை என்றார். இந்திய ஆதிக்கத்தின் அபாயக் கட்டுக்கதையை' எள்ளி நகையாடினார். எவ்வாறாயினும் அவர் இனவாதத் தேர்தல்களின் தீமைகளைக் குறைத்து மதிப்பிடவில்லை. டாக்டர் டபிள்யூ.ஏ.டி.சில்வாவை மேற்கோள் காட்டி அவர் பின்வருமாறு கூறினார்.

இந்நாட்டில் எத்தகைய நிலையான அக்கறையுமற்ற இந்தியர்களிடமும் இந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை கையளிக்கப்போகிறோம் என்று பொதுமக்களுக்கு விளக்கிக் கூறினால் அவர்கள் அதற்கு எதிராக எழுச்சியுற்று தமது கருத்துக்களை உறுதியாக வெளிப்படுத்துவார்கள். இதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது ஓர் உண்மையான அறைகூவல் என நான் ஏற்றுக்கொள்ளவில்லை. யாராவது இத்தகைய அறைகூவலுடன் மக்களிடம் சென்றால் அவர்களை எளிதாக செயலுக்கு தூண்ட முடியும்.

1948ம் ஆண்டின் சுதந்திரத்துடன் சகல வர்க்கங்களையும் சேர்ந்த சிங்கள மக்கள்இனம் மொழி அடிப்படையில் பௌத்தரல்லாத மக்களுக்கு எதிராகப் புனிதபோருக்கு தயாராயினர்.

இந்தியத்துணைக்கண்டத்துடன் நாங்கள் நட்பாயிருக்க வேண்டும். இந்தியாவைப் போற்றுவதற்கும் அவர்களிடமிருந்து அறிவதற்கும் பல உண்டு. நாங்கள் நண்பர்களாயிருக்க வேண்டும். ஆனால் எந்த அடிப்படையில்? எமது மக்களுக்கு துரோகமிழைப்பதன் அடிப்படையிலா? ஒரு போதும் இல்லை. எமது மக்களுக்கு துரோகமிழைப்பதன் அடிப்படையில் எமது நட்பு இருக்க முடியாது.

எவ்வித வேலையுமற்ற சிங்களவர் ஒருவர் பிராஜவுரிமை பெறுவதற்குத் தகுதியுடையவரானால் வருமானம் எதுமற்ற ஓர் இந்தியருக்கு ஏன் இந்த உரிமை விலக்கப்படவேண்டும். இத்தகைய அளவுகோல் மிக மோசமான வகுப்புவாதச் சார்பு உடையது அல்லவா,வகுப்பு வாதச் சார்பு கீழிருந்து வருவதில்லை. எப்போதும் மேலிருந்தே வருவதே.

சிங்களத்தையும் தமிழையும் உடனடியாக அரசகரும மொழிகளாக்கப்படவேண்டும். அப்பொழுதான் இந்நாட்டு மக்கள் தமது சொந்த நாட்டிலேயே அன்னியராக இருக்கும் நிலை ஒழியும். இதன் மூலம் சிங்களம் மூலமும் கல்வி கற்றோர் இன்று வாழ்க்கையின் கடைநிலையில் இருப்பதற்கும் முடிவு கட்டலாம். இவ்வாறு ஞறுசுனு பண்டாரநாயக்கா அவர்கள் கூறினார். ஆனால் 1958இல் தனிச்சிங்கள சட்டத்தினை உருவாக்கினார்.

இலங்கையின் வரலாறு சிங்கள இனத்தின் வரலாறு ஆகும். 2500 வரடங்களுக்கு முன்னர் பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் மகத்தான கடமை இவர்களுக்கு வழங்கப்பட்டது. 1956ம் ஆண்டு: மூன்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறும். இலங்கை வரலாற்றினதும் சிங்களவரினதும், பௌத்த மத்தினதும் 2500 வருட நிறைவு அதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசமொழிப் பிரச்சினை மோசமடைந்தமைக்கு தீர்வுகாண முடியாமைக்குரிய காரணம் இலங்கை மக்களிடையே தேசிய உணர்வு மிகக் குன்றியிருப்பதாகும். சுதந்திரம் பெறுவதற்கு ஏகாதி பத்தியத்தை எதிர்த்து நாம் பரந்துபட்ட மக்களின் போராட்டங்கள் நடத்தவில்லை. ஆயிரக்கணக்கில் தமிழரும் சிங்களவரும் சிறை சென்றிருப்பின் அப்போராட்டத்தால் சிங்களத்தேசிய இனம், தமிழ்த்தேசிய இனம் என்ற உணர்வு குறைந்து இலங்கைத் தேசிய இனம் என்னும் உணர்வு எழுந்திருக்கும் என்று வெஸ்லி குணவர்த்தனா பாராளுமன்றில் கூறி இருந்தார். மேலும் அவர் கூறியது இலங்கைக்கு மிகப்பெரிய ஆபத்து வர உள்ளது. அம்மக்கள், தமக்கு அநியாளம் நடப்பதாக உணர்ந்தால் அவர்கள் நாட்டிலிருந்து பிரிந்து போகக் கூடத் தீர்மானிக்கலாம்.

தொல்வின் ஆர்டிசில்வா பின்வருமாறு கூறினார் "இரத்தம் வடியும் துண்டிக்கப்பட்ட இருசிறு அரசுகள் ஒரு அரசில் இருந்து தோன்றக்கூடும். அண்மையில் வெளியேறிய ஏகாதிபத்திய வாதிகள் மீண்டும் எம்மை ஏப்பம்விட ஏதுவாகலாம்."

மேலும் இந்திய விரிவாக்கம் பற்றிய பாடத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு, ஜே.பி யின் தேசியவாதச் சார்பையே கொண்டுள்ளது. இலங்கையின் சனத்தொகையை பரவலாக்கின் சிங்களவரும் தமிழரும் நாடெங்கிலும் பரந்திருப்பர் என்று இக்கட்சி கூறியத. வேவ்வேறு புவியியற் பிரதேசங்களில் இனக்குழுக்கள் குடியிருப்பதால் ஏறபட்டுள்ள இனப்பிரச்சினையை இது தீர்க்கும் எனவும் கூறப்பட்டது. தமிழ் சிறுபான்மையினர் படிப்படியாக சிங்களப் பெரும்பான்மையருள் இணைந்து விடுதல் என்ற கோட்பாட்டை இந்த இறுதித் தீர்வு அடிப்படையாகக் கொண்டதாகும். இதனையே மகிந்தனை சிந்தனை மூலம் தற்போது நிறைவேற்றப்படுகின்றது.

1982ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் ஜே.வி.பி இனப்பிரச்சினை தொடர்பாக 'தந்திரோபாயமாக மௌனத்தைக் கடைப்பிடித்தது. இந்த மௌனம் பின்னர் சிங்கள மேலாதிக்க வெறிவாதிகளின் கருத்துக்களிலிருந்து எவ்வகையிலும் வேறுபடாத மனபான்மைகளைக் கைக்கொள்வதாக மாறியது.

காலனித்துவ ஆட்சிக் கட்டடத்தைச் சேர்ந்த அனகாரிக தர்மபாலாவினதும் பிறரதும் கரத்துகள் தொடங்கி 1970களின் பிற்பகுதியில் சிங்களர் மத்தியில் அங்கீகாரம் பெற்றதுவரை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சிங்கள –பௌத்த கருத்தியல் உரவாகியமை குறித்து இது வரை ஆராய்ந்தோம். இவ்வுணர்வின் மேலாதிக்கத்தன்மையால் இது சிங்கள பௌத்தரின் சகல வர்க்கங்களையும், தெற்கின் முக்கியமான அரசியற் கட்சிகளையும் தழுவியது. மேலும் 1972ம் ஆண்டு அரசியல் யாப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டதால் சிங்கள பௌத்த மேலாண்மை சட்ட பூர்வமாக்கப்பட்டது. இதனால் அரசியல் யாப்பின் படி இலங்கை சிங்கள தீபமாகவும், தர்ம தீபமாகவும், பௌத்தத்தைப் பாதுகாக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் - சிங்களவரின் நாடாகவும் மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சலுகைகள் இருந்தும் சிங்கள மொழிக்கும் பௌத்த சமயத்துக்கும் முதன்மையான விசேட அந்தஸ்தை யாப்பு தெளிவாக அளித்தது, சிறுபான்மை இன சமயக்குழுக்களை இரண்டாந்தர இடத்துக்கே ஒதுக்கியது.

பௌத்தம் "அரசமதமாக' ஆக்கப்படாவிடினும் அரசின் முன்னைய சமயசார்பற்ற தன்மை மாறியது. புகழ்பெற்ற ரொட்ஸ்கியவாதியான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா 'இந்நாட்டு வரலாற்றில் பௌத்தம் முக்கியமான இடம் பெற்றுள்ளது. அந்த முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும்' என்று கூறி இச்சலுகையை யாப்பில் சேர்ப்பதற்குக் காலா இருந்தார் என்பது முரண் நகைப்புத் தருவதாகும்.

1972ம் ஆண்டு 78ம் ஆண்டு யாப்புகள் சிங்கள மொழிக்கும், பௌத்த சமயத்துக்கும் விசேட அந்தஸ்து அளித்ததன் மூலம் சிறுபான்மையினரது உரிமைகளைப் பெரும்பான்மை இனத்துக்குக் கீழ்ப்படுத்தின. இதன் மூலம் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக வலிமை பெற்று வந்த சிங்கள பௌத்தரின் கோரிக்கைகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரமும் கிடைத்தது.

1915ல் நடைபெற்ற கலவரத்தில் கொழும்பிலுள்ள குற்றவாளிகள் பிறபகுதிகளில் வாழ்ந்து வரும் இத்கையோர் சார்ந்த இயக்கமே கொடுமைகள் புரிந்தன என்று உத்தியோகத்தரால் கூறப்பட்டது. 1958இல் நடைபெற்ற கலவரம் குணடர்களால் நடத்தப்பட்டது என்று பொலிசார் கூறினர். இவற்றைப் போலவே 1983ஜுலையில் நடந்த தாக்குதல் குண்டர்களாலும் குற்றவாளிகளாலும் நடத்தப்பட்டது என்று கூறினர். இத்தகைய விளக்கங்களால் சிங்கள இனத்தவர் இக்கலவரத்திற்கு பொறுப்பில்லை, சட்ட ஒழுங்கை கடைப்பிடிக்காத சமூக விரோதிகளே காரணம் என்றும் கூறினர். அதே காரணத்தையே தற்போது முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறைகளிலும் கூறுகின்றனர்.

சிங்கள மக்களின் உணர்வின் கூற்றக்களை காண்பதற்கு விழிப்பாக வரலாற்று ரீதியான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வேளையே அவர்கள் சிந்தனையில் மறைந்திருக்கும் பொய்மை, தவறான விளக்கங்கள், புராணீகப் போக்குகளை அம்பலப்படுத்த முடியும். ஆரிய இனத்தவர் என்ற ஐதீகமும், விஜயன் வம்சத்தவர் என்ற பொய்மையும், துட்டகைமுனு போல வீரபுருஷர்களை உருவாக்குகிறோம் என்ற கூற்றும் இன்று புத்தயிர் பெற்றுள்ளன. இவை மீண்டும் இனவெறியைத்தூண்டும் பலமிக்க குறியீடுகளாக உள்ளன.

இறுதியாக இற்றைக்கு 125 வருடங்களுக்கு முற்பட்ட தொழிற்சங்கப்போராட்டங்களே இலங்கை மக்களை ஒன்றுபடுத்தியது. அதில் சேர்.பொன்அருணாசலம் அவர்கள் காலனித்துவ விடுதலைக்கும் சுயாட்சிக்கும் வித்திட்டார். துரதிஸ்டவசமாக சர்வசன வாக்கெடுப்பில் இனவாத்தினை தொழிற்சங்க தலைவர்கள் A.E.குணசிங்கா முதற் கொண்டு டட்லிசெனநாயக்கா, பண்டாரநாயக்கா வரை புகுத்தினர். ஆரம்பத்தில் இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாளிகளை எதிர்த்து போராடிய சிங்களவர் தொழில் நிமித்தம் பின் இந்தியத்தமிழர்களின் வாக்குரிமையை தடுக்க முன்னின்றனர்.இதுவே பிரஜாவுரிமை சட்டத்தின் தோற்றம். பின் சிங்களமொழி கொள்கையை உருவாக்கினர். 1972ம் ஆண்டு யாப்பு, 1978ம் ஆண்டு யாப்புகள் முற்றுமுழுதாக இலங்கையை சிங்கள பௌத்த நாடாக பிரகடனப்படுத்தியது. இதனாலேயே இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழ் தமிழர்கள் தமது பாரம்பரிய பூமியை பாதுகாக்கும் கோரிக்கையை கோர வேண்டி ஏற்பட்டது. மலையாளி விரோதம், மலையகத் தமிழ் விரோதம் ஈற்றில் ஈழத்தமிழ் விரோதமாக மாறியது. துரதிஸ்டவசமாக மலையக, முஸ்லீம் தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளின் ஆதரவுடன் தமிழின அழிப்பு பாகம் ஒன்ற 2009இல் முற்றுப்பெற்றது. 2009ம் ஆண்டு தமிழின அழிப்பினை பெரிதுபடுத்தாது ஐநா மனித உரிமைத்தீர்மானம் இன அழிப்பினை ஊக்கப்படுத்துவதாகவே அமைகின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற சொற்றொடர் தமிழின அழிப்பினை அங்கிகரிப்பதாக உள்ளது. தமிழ் மக்கள் என்ற சொல் பாவிக்கப்படாமை தமிழின அழிப்பு என்ற நிகழ்வை ஆவணப்படுத்தாது தவிக்கின்றது. ஒன்றுபட்ட இலங்கையர் என சிங்களத்துவ மேலாதிக்கத்தினை அங்கிகரிப்பதாக உள்ளது.

தொடர்ந்திருக்கக்கூடிய சமாதானத்தைக் கட்டி எழுப்ப அதிகார அடிப்படையிலான அணுகுமுறையே காணப்படுகின்றது. இது தவறானது. உரிமைகளை அடிப்படையாகக்கொண்ட அணுகுமுறை தேவை. விருப்ப அடிப்படையிலான அணுகுமுறை தேவை. கருத்துச்சுதந்திரம் இல்லை. ஜனநாயகச்சூழல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. இலங்கையில் தமிழர்கள் அடக்கப்படும் வழிகளும், அவற்றினை எதிர்கொள்ளும் வழிப்பும்.

இலங்கையின் அரசியலமைப்பு சிங்கள பௌத்த பெரும்பான்மை பலத்தினால் இயக்கப்படுகின்றது. இதில் சிறுபான்மை மக்களுக்கு நேரடியான அனுகூலங்கள் குறைவு. பாராளுமன்றச் சட்டங்கள் அடிப்படையில் தமிழ் மக்களைப்புறம் தள்ளும் தன்மையதாகவே உள்ளது. இதில் முக்கியமானவை சிங்களமொழிச்சட்டம், பயங்கரவாதத்தடைச்சட்டம் என்பனவாகும்.

பயங்கரவாதத்தடைச்சட்டம் மூலம் தமிழர்கள் பயங்கரவாதிகள் என அடையாளமிட்டு, தொடர் இனப்படுகொலைகள் நடைபெற்று உள்ளன. சர்வதேச ரீதியில் குறிப்பாக தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகளாக அடையாளமிடுவதில் வெற்றி பெற்று 2009ம் ஆண்டு பாரிய மனித அவலம் ஏற்பட்டது. தற்போதும் அதே வகையிலான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் மக்கள் தொடர் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து உயிரிழப்பு, காயங்கள் என்பனவற்றிற்கு அப்பால் தொழில் வாய்ப்பினையும் இழந்து உள்ளனர். தற்போது இலங்கை சிங்கள அரச அமைச்சர்கள் சில தமிழ் வர்த்தகர்களிற்கூடாக பாரிய பொருளாதார முதலீட்டை, தனியார் வைத்தியசாலை முதல் கொண்டு வாகன விற்பனை நிலையங்கள் வரை இட்டு, தமிழ் மக்களது பணத்தினையும், உழைப்பினையும் சுரண்டும் வேலையைச் செய்கின்றனர். அடுத்து தமிழர்களது காணிகளையும் விலைக்கு வாங்குகின்றனர். அடுத்து வங்கிகள் பல தமிழரின் முதலீட்டினை மறைமுகமாக தன்வயப்படுத்துகின்றன.

இலங்கை அரசின் திட்டமிடல்கள் தமிழர்களை அடக்கும் விதமாகவே உள்ளது. இதனை வெளியுறவுக்கொள்கையில் இருந்து உள்நாட்டு அபிவிருத்தி வரைக்காணலாம். பொது நிர்வாகத்தில் மும்மொழிக்கொள்கை கடைப்பிடிப்பதாக இருந்தாலும் சிங்கள மொழியினையே பொதுவாக அமுல்படுத்தப்படுகின்றது. கல்விக் கொள்கையில் சிறுபான்மைத்தமிழருக்கு சிங்கள மொழி கற்பிப்பதனால் தமிழ் மொழியின் சிறப்பு அற்றுப்போகும் நிலை உள்ளது. பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழிக்கற்கைக்கு முக்கியத்துவம் குறைக்கப்பட்டு உள்ளது. அரசின் கைக்கூலிகளே நிர்வாகத்திலும் உயர்பதவியிலும் அமர்த்தப்பட்டு உள்ளனர். நீதித்துறையில் நீதி தமிழருக்கு வடிகட்டப்பட்டே வழங்கப்படுகின்றது. குறிப்பாக தமிழ் மக்கள் மீது மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைச்சட்டம் சிறப்பாகக் கையாளப்படுவதில்லை. பொதுவாக நிர்வாகம், கல்வி, நீதி துறைகளில் தமிழர்களின் உரிமைகளைப் புறம் தள்ளி தனிப்பட்ட சலுகைகளுக்கு தமிழ் அதிகாரிகள் முன்னிற்பது கவலைக்கரியது. இவர்கள் கூறும் மகிந்தசிந்தனை என்பது தமிழின அழிப்பின் இடக்கரடக்கல் சொல்லேயாகும்.

இலங்கைக்காவல் துறையில் 95% மேல் சிங்களவர்களே பணிபுரிவதும் அவர்கள் சிங்களமொழியிலேயே முறைப்பாடுகளை எழுவதும் தமிழ் மொழியினை அடக்கும் முறையாகக் கருத இடமுண்டு. இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை என்பனவற்றில் 99% மேல் சிங்களவர்களே உள்ளமையும் இவர்களில் 80% அதிகரிமானோர் தமிழர்களின் பாரம்பரிய இடமான வடக்குக்கிழக்கில் நிலை கொள்ள வைத்து உள்ளமையும் தமிழர்களை அடக்கும் ஒருவகைத்திட்டமே ஆகும். குறிப்பாக 2009ம் ஆண்டு தமிழினப்படுகொலைக்குப் பின்பும் இவர்களின் அதிகாரம் குறைக்கப்படாது இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் நிலை கொள்ளல் மிகவும் ஆபத்தானது இதனை சர்வதேசம் இன்னமும் கண்டு கொள்ளவில்லை. வடக்குக்கிழக்கில் இராணுவம், கடற்படை, விமானப்படை நிலைகொள்வதாயின் குறைந்தது அதில் 50% தமிழர்கள் இடம் பெறல் வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் அடக்கப்பட இந்திய வெளியுறவுக் கொள்கையும் பிரதானமான பங்கை வகிக்கின்றது. இந்தியா இலங்கை அரசினூடாக இந்து சமுத்திரத்தில் தனது ஸ்திரத்தன்மையை தக்க வைக்கின்ற வெளியுறவுக்கொள்கை மூலம் ஈழத்தமிழரை கைவிட்டு உள்ளது. இதனை அவ்வப்போது இந்தியாவில் நடைபெறும் இலங்கை இந்திய கூட்டு இராணுவப்பயிற்சிகள் எமக்கு உணர்த்தி உள்ளன. இதன் வெளிப்பாடு தமிழரை அடக்குவதேயாகும்.

அடுத்து இலங்கை அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டு உள்ள இன அழிப்புப்போரினை உள்ளநாட்டு விவகாரமாகவே சர்வதேசத்திற்கு சித்தரிக்கின்றது. இதற்கு காலத்திற்கு காலம் அமெரிக்க அரசு உட்டபட மேலைத்தேய நாடுகளில் ஆசீர்வாதமும் சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஆதரவும் கிட்டுகின்றது. மேலும் 2009 நடந்த இனப்படுகொலைகளைக் கூட ஐநா மனித உரிமைப் பேரவையில் உள்நாட்டு விவகாரமாக காலம் கடத்த நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கித் தப்பித்து உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் குறிப்பாக ஜனநாயக அரசியல் சூழல் இல்லாத நிலைமை உள்ளது. சுதந்திரமாக அரசியல் கருத்துக்களை வெளியிடமுடியாது. அரசியல் நடத்துபவர்களுக்கு இலங்கை அல்லது இந்திய புலனாய்வுக்குழுக்களின் ஆதரவு தேவை. தேர்தல்களில் ஆயுதக்குழுக்களின் அரசியலும், கறுப்பப்புணத்தைக் கொடுத்து வாக்கு வாங்கும் அரசியலும் உள்ளது. இது தமிழர்களுக்கு உரிமைக்குரல் கொடுப்போரைப் பின்னடைய வைத்து உள்ளது.

இனவாதத்தை தூபமிடும் அல்லது துணை போகும் அரசியல் கட்சிகளே சிங்களவர்கள் மத்தியில் பிரபல்யம் மிக்கது. விருப்பமுடையது. ஹெல உறுமய, ஜேவிபி என்பன இனவாதக்கட்சிகள். அரசுக்கட்டிலில் ஏறும் அல்லது ஏறமுயலும் கட்சி இனவாதத்திற்கு துணை போகும் கட்சியாகும். இவற்றின் நிகழ்ச்சி நிரல்கள் தமிழர்களை அடக்குவதாகவே எப்போதும் அமையும். மிகவும் அண்மையில் முஸ்லீம்கள் மீது எம்பிலிப்பிட்டியாவில் நடந்த சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு. தமிழரைப்பயங்கரவாதிகள் என்ற பெயரில் அமெரிக்கா, இந்தியா, உட்பட பல நாடுகளின் துணையுடன் அழித்தது போல் முஸ்லீம்களையும் சீண்டி, அல்கைடாவுடன் தொடர்பு எனக்கூறி அமெரிக்காவின் ஆதவினைக்கோர சிங்கள இனவாதிகள் குறிப்பாக ஹெல உறுமய கட்சியின் பகீரதப்பிரயத்தனம் புரிகின்றன.

அடுத்து ஆட்சி புரியும் அரசுக்கு ஊழியம் செய்யும் ஆயுதக்குழுக்கள் துணைக்கட்சிகளாக அரச இயந்திரத்தில் அமர்த்தி உள்ளனர். இவர்களின் செயற்பாடுகள் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளே அமைந்து தமிழர்கள் உரிமைகள் மழுங்கடிப்படுகின்றது. இவர்களால் தமிழர்களது முற்போக்கு இலக்குகள் காட்டிக்கொடுக்கப்படுகின்றன.

ஊடகங்கள் பல குறிப்பாக சிங்கள ஊடகங்கள் தமிழருக்கு நிகழ்ந்த அழிவுகளை உலகிற்கும் கூறவில்லை. சிங்கள மக்களுக்கும் கூறவில்லை. மாறாக இனவாத்தினையே ஊட்டி உள்ளன. அடுத்து தமிழ் ஊடகங்களிலும் பல புல்லுருவிகள் தோன்றி தமிழ் மக்களின் அவலங்களை மறைக்க அல்லது மழுங்கச் செய்ய முயலுகின்றனர். பல இணைய ஊடகங்கள் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது போல் செய்தியை வெளியிட்டு, முக்கியமான அழிவு வேலைகளில் ஈடுபடுகின்றன. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் போட்டிப் பத்திரிகைகள் கூட மக்களிற்கு அம்புலிமாமா கதையை கூறி உண்மை நிகழ்வுகளை தூரத்தள்ளுவதும், இலங்கை இராணுவத்திற்கு பயப்படுவது போல் கட்டுரைகளை எழுதி மக்களை வெருட்டுவதுமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் ஊடகங்கள் மனித உரிமைகளிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நேர்மையினைக் கடைப்பிடிக்க வேண்டும். பல செய்தி ஆசிரியர்களைக் கடமையில் வைத்திருக்க வேண்டும்.

நிர்வாக அதிகாரிகளது சர்வதிகாரம் தமிழரை கூடுதலாக அடக்குகின்றது. குறிப்பாக ஆளுனர், அரச அதிபர், பிரதேச செயலர், திணைக்கள அதிகாரிகள் என்போர் நிர்வாகச்சர்வதிகாரம் மூலம் மேல்மட்டத்தில் இருந்து கீழ்நோக்கி காரியங்களை கைக்கொள்கின்றனர். கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு உள்ளது. இவை மாற்றமடைய வேண்டும்.

இலங்கையில் இருந்து தமிழர்களை இலங்கை கடற்படையின் ஏற்பாட்டில் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பிப் பின் அவர்களை அவுஸ்திரேலிய அரசுக்கு தகவல் கொடுப்பதால், நடுக்கடலில் பிடிபடப்பண்ணி, அவுஸ்திரேலிய அரசிடம் இருந்து கடற்படைக்கான ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்கின்றது. அத்துடன் தமிழர்களை "சட்டவிரோத குடியேற்ற வாசிகள்" என்ற பிரசாரத்திற்குள் அகப்படுத்தி உலகில் தமிழனைப்பயங்கரவாதிகளாக நோக்கிய தன்மைக்கு அப்பால் சட்டவிரோத குடியேறிகள் என்ற கறுத்தப்புள்ளினை பெறவைக்கப்பட்டு உள்ளது. இதனால் சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டும் தமிழன் சிறை வைக்கப்படுவான்.

உலக அரங்கில் குறிப்பாக ஐநா சபை, தூதரங்களில் போலியான மனித உரிமை ஆர்வலர்களின் செயற்பாட்டினால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மறைக்கப்ப்படுகின்றது. இதற்காக அதிக பணம் செலவிடப்படுகின்றது.

அரசின் திட்டமிடலில் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் கைது, கடத்தல்கள், தடுப்பு வைத்தல், கொலைகள், பாலியல் துஸ்பிரயோகம் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அண்மையில் இவ்வாறான சம்பவத்தில் அரச நிகழ்ச்சி நிரலில் இயங்கும் மகிழ்வுடன் வாழும் மனநலநிபுணர் மாமா வேலை செய்து உள்ளார்.

சிங்களக்குடியேற்றங்களுக்கும் விகாரை அமைத்தலும் தமிழ் நிலங்களில் குறிப்பாக வடமாகாணத்தில் அத்து மீறி நிகழ்கின்றன. இவை யாவும் தமிழன் அடக்கப்படும் வழிவகைகளேயாகும்.

மேற்கூறிய விதங்களில் தமிழர்கள் ஈழத்தில் அடக்கப்படுகின்றனர். எனவே எங்கள் மௌனங்கள் எம்மினத்தினை நிரந்தர மௌனங்களாக மாற்றிவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனிவா மனித உரிமை பேரவையின் 22வது அமர்வில் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தமிழ் மக்களது அன்றாட வாழ்வில் ஏற்படுத்தப்போகும் மாற்றங்கள் இலங்கை அரசின் நடவடிக்கைகளிலேயே உள்ளது. இலங்கை அரசின் ஜெனிவாத்தீர்மானம் தொடர்பான கண்டனக்கர்ச்சனைகள் சிங்கம் தனது நிழலை கிணற்றில் பார்த்துக் கர்ச்சிப்பது போல் உள்ளது.

ஈழத்தமிழ் மக்கள் இனஅழிப்புக்கு உட்பட்ட தன்மையை எவ்வளவு விஞ்ஞான ஆதாரங்களுடன் நிருபித்தும் மனித உரிமைத்தீர்மானத்தில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்ற சொல்லோ, தமிழின அழிப்பு நடைபெற்றது என்ற வாசகங்களோ காணப்படவில்லை. மாறாக பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற சொல் தமிழ்மக்கள் மீது இலங்கை அரசு நடத்திய தாக்குதலை ஒரு போராகவும், அதில் இறந்தவர்கள் யாவரும் பயங்கரவாதிகளாகவும் மறைமுகமாக கூறுகின்றது. மேலும் இலங்கை அரசு செய்த உலகின் மிகப்பெரும் மனிதபடுகொலைகளைக் காலத்துடன் மறைப்பதற்கே இத்தீர்மானம் உதவும். இது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு ஏமாற்றத்தினை அளிக்கின்றது. மீள்குடியேற்றம் என்ற பெயரில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்ளை அங்கீகரிப்பதாகஇத்தீர்மானம் அமைகின்றது. இது தமிழ் இனச் செறிவினைக்குறைக்கும் அரசின் நடவடிக்கைக்கு ஒர் உந்து சக்தியாக அமையும். எனவே தொடர் தமிழ் இன அழிப்புக்கு ஒரு சார்புத்தீர்மானமாக இதனைக்கருத முடியும்

மொத்தத்தில் தமிழின அழிப்பினை மேற்கொள்வதற்கு சர்வதேச அங்கீகாரத்தினை மறைமுகமாக மனிதஉரிமைத்தீர்மானம் கொடுத்துள்ளது போல் தோற்றுகின்றது. அடுத்து இலங்கையில் தேர்தல் நடைபெற்ற சூழலில் வரவேற்று உள்ளமை கடந்த காலத்திலும் தேர்தல் நடைபெற உள்ளதை ஆயுதக்குழுக்களாலும், அரசபுலனாய்வு ஆயுததாரிகளாலும் இந்திய புலனாய்வு அதிகாரிகளாலும் தீர்மானிக்கப்பட்டு நடைபெற்றதனையும் தேர்தல் நடத்துவதற்கு உரிய ஜனநாயகச்சூழல் இல்லாமையினையும் சுட்டிக்காட்டத்தவறி உள்ளது. அடுத்து 13ம் திருத்தச்சட்டத்தினை அமுல் படுத்த வேண்டும் என்ற தீர்மானமும் சர்வதேச ரீதியில் இந்திய இராணுவம் மீளவும் 1987ம் ஆண்டு போல் எந்நேரமும் இலங்கையில் தடம்பதிப்பதற்கு ஒர் அங்கீகாரமேயாகும்.

இவை யாவும் ஈழத்தமிழர்களின் அரசியலில் உள்ள எதிர்காலப்பிரச்சினைகளாகும். இதனை சாதுரியமாக எதிர்கொள்வதன் மூலம் இலங்கையில் தமிழர்கள் தமது இருப்பைத் தக்க வைத்தக்கொள்ளமுடியும்.

கடலினை இறைப்பதன் மூலம் கரையினை அடைந்து விடலாம் என்பது போல் தமிழின அழிப்பினை மறைக்க எடுக்கப்படும் எத்தனங்கள் எதுவும் வெற்றியளிக்கப்போவதில்லை என்பதற்கு சான்றாக இன்றைய தமிழகத்தின் தமிழீழ எழுச்சி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. இனப்படுகொலையின் பத்துப்பபடிநிலைகளும் அவை இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக நடந்தமையை இல்லை என்று கூறாதிருப்பதற்கான அம்சங்களும்

முரண்பாடுகளைத்தீர்த்தல் என்பது முரண்பாடுகளில் இருந்து விலகல் என்று அர்த்தப்படமாட்டாது. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா சுதந்திரம் பெற்றபோது காந்திஜி அவர்கள் இந்தியாவில் இருந்து மதரீதியாக பாகிஸ்தானை பிரித்துக்கொடுத்தமை, இந்து முஸ்லீம் மதரீதியிலான நல்லிணக்கத்திற்கு பாதகமாக அமைந்தது. உண்மையில் இணைந்த நாடாக இருந்திருந்தால் மதரீதியிலான நல்லிணக்கம் ஏற்பட்டு இருக்கும். இதற்கு மறுப்புக்கூறுபவர்கள் பலமொழிரீதியிலான மாநிலங்கள் உள்ளபோது மதரீதியிலும் இந்தியாவில் மாநிலங்கள் பாகிஸ்தான், பலுச்சிஸ்தான், வங்காளம் என உருவாகி இருந்திருந்தால் இன்று இந்தியா உலகின் முதல்தர வல்லரசாகி இருக்கும். இதுவே மகாத்மா காந்திஜி, நேருஜி, ஜின்னா அவர்கள் விட்ட தவறு. ஆபத்தான அணு ஆயுதங்களையும், ஏவுகணைகளையும், படைபல அதிகரிப்பினையும் மேற்கொள்ளாது மக்களின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தி இருக்கலாம். அடுத்து இன்று அமெரிக்க அரசால் உலகின் பயங்கரவாத செயலுக்கு ஊக்குவிக்கும் நாடாக நேரடியாக பாகிஸ்தானும் மறைமுகமாக இந்தியாவும், (குறிப்பாக இலங்கையில் ஆயுதக்கலாச்சாரத்தினை உருவாக்கியமையில்) கருதப்படும் நிலைமை ஏற்பட்டு இருக்காது.

இந்நிலையில் 2009ம் ஆண்டு வன்னியில் நிகழ்ந்த இனப்படுகொலைக்கு இரட்டைப் பொறுப்பை (Dual Responsibility for Genocide) இந்தியாவும் இலங்கையும் ஏற்கவேண்டும். இதனை வரலாறு ஒருபோதும் மறுக்காது. இனப்படுகொலை நடைபெறல் 10படி நிலைகளை உள்ளடக்கியது. அவையாவன.

படி ஒன்று : **Classification** (இனப்படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை வகையிடல்)

இனப்படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை வகையிடல். இதன்போது மக்கள் நாங்கள், அவர்கள் என வேறுபட்டு நிற்பர். இங்கு சிங்களவர், தமிழர் என்று வேறுபட்டு நின்றனர். இன்றும் அவ்வாறான அரசியல் சூழ்நிலையே உள்ளது. இது இனப்படுகொலை தொடர ஏதுவாகும். இனப்பாகுபாடு இல்லாத நிர்வாகம் இதற்கு தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி இரண்டு : **Symbolization** (இனப்படுகொலை மேற்கொள்வதனைக் காரணப்படுத்தல்)

இனப்படுகொலை மேற்கொள்ளப்படுபவர்களை வெறுக்கத்தக்கவர்களாக அடையாளப்படுத்தல். இங்கு தமிழ்மக்களை, கொடிய பயங்கரவாதிகளாக உருவகப்படுத்தி, உள்ளநாட்டிலும், இந்தியாவிலும், மேற்குநாடுகளிலும் பிரச்சாரம் செய்யப்பட்டது. யுத்தம் முடிந்த பின்பும் தமிழ் அதிகாரிகளே தம்முடன் போட்டியிடும் சக அதிகாரிகளை அவர்புலி, இவர் புலி என அடையாளப்படுத்திப்பார்க்கும் நிலையும் மனிதநேயத்தை பற்றி கதைப்பது பயங்கரவாதம் என்ற அடையாளமும் உள்ளது. இது தவறானது. இத்தகைய செயல்களை பொறுப்புள்ள பதவியில் உள்ளவர்கள் தவிக்கவேண்டும். அரசியல் வாதிகளும் இதனை தவிர்க்கவேண்டும்.

படி மூன்று : **Dehumanization** (அழிக்கப்படும் மக்களை மனிதர்களாகக் கருதாமை)

அழிக்கப்பட்ட இனத்தினை மனிதர்களாக கருதாமை அவர்களை வேண்டத்தகாத ஜந்துகளாகவே கருதி அழித்தல். குறிப்பாக அழிக்கப்பட்ட தமிழ்மக்கள் அனைவர் புலிகள் என்றவாதமும், புலிகள் அனைவருமே பூண்டோடு அழிக்கப்பட்டனர் என்ற வாதமும் இத்தகையது. இத்தகைய இனப்படுகொலைக்குப்பின்பும் புலிகளை பயங்கரவாதிகளாக இலங்கை, இந்தியா, மேற்கு உலகம் தடைசெய்வது தமிழ்மக்களை, புலிகளாக தடைசெய்து மேலும் இனப்படுகொலைகளை ஊக்குவிப்பதாகவே அமையும்.

படி நான்கு : **Organization** (அமைப்பாக செயற்பட்டு அழித்தல்)

அமைப்பாக செயற்பட்டு இனப்படுகொலையை மேற்கொள்ளல். ஊண்மையில் இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இனப்படகொலை சர்வதேச நாடுகளின் அனுசரணையுடனேயே நடைபெற்றது. (Co chaired Genocide) இதில் இலங்கை அரசும் இலங்கை ஆயுதப்படையும் நேரடியாக தொடர்புபட்டது. இனப்படுகொலைக்கப்பின்பான கொடுக்கல் வாங்கலில் உள்ள பிணக்குகளையே ஐநா மனிதஉரிமை அமர்வின் வெளிப்பாடு. உலகநாடுகள் நினைத்திருந்தால் தமிழின அழிப்பினைத்தடுத்திருக்கலாம். ஆழிப்பிற்கு பின்பான புனர்வாழ்வினை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக ஏற்படுத்தி இருக்கலாம். இளம் குடும்பத்தினர் விசாரணைகள் இன்றி சிறையில் அடைக்கப்பட்டவர்களாக உள்ளனர் அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவித்து இருக்கலாம். வளமான எதிர்காலத்தினை உருவாக்கும். இவை படுகொலையின் தொடர்ச்சியே ஆகும்.

படி ஐந்து : **Polarization** (படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை முனைவாக்கல்)

படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை வெறுக்கும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இங்கு தமிழர்கள் பயங்கரவாதிகள் அப்பாவிமக்களைக் கொல்பவர்கள். போதைப்பொருள் வியாபாரம் செய்பவர்கள். மனிதக்கடத்தலில் ஈடுபடுபவர்கள் (Human trafficking) என்ற வகையில் பிரச்சாரம் இலங்கை, இந்தியா, மேற்குலகம், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு பயங்கரவாதத்தினை அடக்குவதற்கான சர்வதேச ஆதரவும் பெறப்பட்டு அதன் வழியிலேயே இனப்படுகொலை நடைபெற்றது. மேலும் அதே வகையில் மீண்டும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவது தமிழினப்படுகொலை தொடர்வதற்கு ஏதுவாகும். இதில் தமிழ் மக்களுக்கு உலகநீதி மறுக்கப்பட்டது. இந்நிலைமை இனிமேலும் தொடரக்கூடாது.

படி ஆறு : **Preparation** (படுகொலையினைத் திட்டமிட்டல்)

படுகொலையினைத்திட்டமிட்டுத்தயாரித்தல் வன்னியில் இருந்து ஐநா தொண்டு நிறுவனங்களை வெளியேற்றியது, மக்களை பாதுகாப்புவலயம் எனக்கூறி குறித்த இடத்தில் செறிவடையச்செய்து தாக்குதல் நடத்தியமை இன்படுகொலை திட்டமிட்டு நடைபெற்றதற்கு ஆதாரம். இதனை ஐநா நிறுவனங்கள் சிந்தித்து இருந்தால் தவிர்த்து இருக்கலாம்.

படி எழு : **Extermination** (பூண்டோடு அழித்தல்)

பூண்டோடு அழித்தல், மக்கள் நெருக்கமாக வாழ்ந்த இடத்தில் பெருமளவு சுடுகலன் பிரயோகம், பாரியவிமானத்தாக்குதல், கடல்வழித்தாக்குதல், தடைசெய்யப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் என்பன நிகழ்ந்து உள்ளன. இதற்கு செய்மதிப்படங்களும் இவ்வாயுதங்களை இலங்கை அரசுக்கு கொடுத்த உலகநாடுகளும் ஆதாரம். இவ்வாறான நிகழ்வுகள் உலகில் இனிமேல் எவ்விடத்திலும் நடைபெறக்கூடாது. இதில் ஐநா செயலாளர் நாயகம் பொறுப்பற்றவராக செயற்பட்டு உள்ளார். ஏனெனில் இனப்படுகொலைக்குப்பின் 3 ஆண்டுகள் கழிந்தும் இதனை விஞ்ஞானத்தடவியல் ரீதியில் இனப்படுகொலை என வரையறுக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி எட்டு : **Denial** (படுகொலை நடந்தமையை மறுதலித்தல்.

மறுத்தல் - நவீன விஞ்ஞான தொழில் நுட்ப ஆதாரங்கள் இருந்தும் இலங்கை அரசு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொடர்ச்சியாக மறுத்துவருகின்றது. இதற்கு துணைபோவதாக இந்திய மத்திய அரசும் மிகவும் அநாகரிகமான இராஜதந்திர நகர்வுகளைச் செய்கின்றது. இவ்வாறு செய்யின் மீளவும் தமிழினம் இலங்கையில் அழிக்கப்படும் சாத்தியம் உள்ளது. இதனை நாம் விலத்த சிறந்த அரசியல் சாணக்கியம் தேவை.

படி ஒன்பது : **Discrimination** (படுகொலைகளான இனத்தினை பாகுபடுத்தல்)

தமிழ் இனம் மீதான பாகுபாடு இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலம் முதலே உள்ளது. மலையகத்தமிழர் குடியுரிமை பாதிக்கப்பட்டது முதலாவது நிகழ்வு. இதில் இந்திய அரசு தமிழ் மக்களுக்கு சாதகமாக செயற்படவில்லை. தொடர்ந்து தொழில்வாய்ப்பு — சிங்களச்சட்டம், கல்வி (பல்கலைக்கழக அனுமதி) என இன ரீதியான வேறுபாடு தொடங்கி ஈற்றில் தமிழன் பயங்கரவாதி என பாகுபாடுபடுத்தப்பட்டான்.

யுத்தத்திற்கு பின்பும் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், கைதுசெய்யப்பட்டவர்களின் விடுதலை, அபிவிருத்தியில் தமிழ்மக்களது வளம் சுரண்டல், மனிதஉரிமைகள் செயற்படுத்தல் என்பனவற்றில் இனரீதியான பாகுபாடு காணப்படுகின்றது. இனப்படுகொலைகள் மீளவும் ஏற்படாது இருக்க இவை களையப்படல் வேண்டும்.

படி பத்து : **Persecution** (படுகொலைக்க ஆளாகும் இனத்தினை தொடர்ச்சியாக துன்புறுத்தல்)

தொடர்ச்சியான துன்புறுத்தல்கள். தமிழர்களின் பாரம்பரியத்தாய் நிலம் இராணுவ வலயங்களாக பிரிக்கப்பட்டு இராணுவ நிர்வாகத்தினூடாக பொது வாழ்க்கை மக்கள் உட்பட்டு உள்ளனர்.

பிரதேசத்திற்கு பிரதேசம் இராணுவத்தின் பிரசன்னம் வேறுபட்டு காணப்பட்டபோதும், விசாரணைகள், கட்டுப்பாடுகள் என்பன சனநாயகத்திற்கு அப்பால் நிகழ்கின்றன. இவை இனப்படுகொலையின் தொடர்ச்சியாகவே நாம் கருதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலையினை பாரியகொலைகள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றம், மனிதனின் மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கை எனப் பலவாறாக விபரிக்கலாம். இலங்கையில் இவை நடைபெற்றதை ஏற்றுக்கொள்ளும் இடம் இன்றும் ஏற்படவில்லை. மாறாக புலிகளால் இறந்த சிங்கள மக்களின் படங்களைப் பத்திரிகையில் மீள மீளப்பிரசுரித்து தமிழ்மக்களின் கொலையை புலிகளின் அழிவாக நியாயப்படுத்தும் தன்மை காணப்படுகின்றது. இதனை சிங்கள மக்களுக்கும், சிங்கள அரசுக்கும் தவறெனக்கூறவேண்டியது தமிழ் புத்திஜீவிகளின் கடமையாகும்.

குறிப்பாக அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம், சட்டவாளர்சங்கம், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள், யாழ் மறைமாவட்டகத்தோலிக்கத்திருச்சபை போன்றவை இன்றுவரை மௌனம் காப்பது மனிதகுலநியதிக்குத் தப்பானது. குறிப்பாக யாழ் பல்கலைக்கழகத்தின் மனிதஉரிமைகள் தொடர்பான மௌனம், சர்வதேச ரீதியில் அரசியல்வாதிகளை மட்டுமல்ல, கல்வியலாளர்களையும் புறக்கணிக்கும் நிலைமை ஏற்படலாம்.

நாம் வன்முறை காயத்தில் இருந்து துன்பப்படும் போது இதனால் சமூகத்தில் ஏற்றட்ட பாதிப்புக்களை மூன்று வகையில் வகைப்படுத்தலாம்.˙. (Trauma grid)

1. முதலாவது எதிர் விளைவு

   மன உழைச்சல்களும், மனஅழுத்தமும், உளநோய்நிலைகள் என இவை அமைகின்றது.

2. இரண்டாவது முன்னோக்கிய விளைவு

   இதில் துன்பத்திற்கு பின்பான அபிவிருத்தி, கல்விநாட்டம், தொழில்வாய்ப்பு, புனர்வாழ்வு என்பன அமைகின்றன. வன்முறைக்கு பின்பான அபிவிருத்தி இதில் அடங்கும். கிழக்கின் உதயமும், வடக்கின் வசந்தமும் இதில் அடங்கும்.

3. மூன்றாவது வன்முறைக்கு பின்பான நடுநிலைமைப்போக்கு அல்லது மௌனம் அதாவது வன்முறையின் தாக்கத்தினால் அவர்களின் செயலில் மாற்றம் ஏற்படவில்லை.

இவ்வாறான மூன்று நிலைகளும் எமது பிரதேசத்தில் தனிநபர் மட்டத்திலும், குடும்ப மட்டத்திலும், சமூக மட்டத்திலும் காணப்படுகின்றது. உலகமயமாதல், இனப்படுகொலையினைத் தடுக்கத்தவறிவிட்டாலும், படுகொலைக்கு பின்பான விழிப்பில் செல்வாக்குச்செலுத்துகின்றது. நாடு கடந்த அரசு என்ற கோட்பாடு இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயே உருவாகி உள்ளது. புதிய விடுதலைக்கோட்பாடு (Neoliberal theory) எதிர்வரும் தசாப்தத்தில் நாடு கடந்து வாழும் மக்களிடையே குறிப்பாக சீனா, இந்தியா பொன்ற நாட்டுப்பிரஜைகளும், நாடுகடந்த அரசுகளை உருவாக்கும் நிலைமையினை ஏற்படும். இது உலகமயமாதலின் புதிய அரசியல் பரிணாமமாக அமையும்.

1. அண்மைய இலங்கை அரசியல் போக்கில் தமிழர்கள் அதிகம் எதிர்பார்ப்பது என்ன?

தமிழர்களின் பாரம்பரிய நிலம் பாதுகாக்கப்படல் வேண்டும். தமிழ் பிரதேசங்களில் சிங்களகுடியேற்றங்களோ, நிலஅபகரிப்புக்களோ மேற்கொள்ளக்கூடாது. சிறையில் உள்ள அனைத்து தமிழ்க்கைதிகளும் பொது மன்னிப்பில் விடுவிக்கப்படல் வேண்டும்.

2. தமிழ் மொழி பாதுகாக்கப்படல் என்றால் என்ன?

சிங்கள மொழி பண்பாட்டுத் தன்மயமாதலால் தமிழ்மொழி ஆக்கிரமிப்புச்சூழலில் அழியக்கூடிய சாத்தியங்கள் உள்ளது. சிறுபான்மை இனம் தனது தாய் மொழியை பாதுகாக்க தாய்மொழியையும், உலகப்பொதுமொழியான ஆங்கிலத்தினையும் மட்டுமே கற்க வேண்டும். சிங்கள மொழியினைக்கற்றல் அல்லது திணித்தல் தவறானது ஆகும். மேலும் அடுத்த 100 ஆண்டுகளில் தொழில்நுட்பப்புரட்சியில் ஆங்கில மொழிக்குள் தமிழ் மொழியும் சாத்தியம் உள்ளது. இதனைத்தவிர்க்க தற்போதைய கல்விச்சிந்தனையில் குறிப்பாக கணணித்தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழியின் பிரயோகத்தினை நாம் அதிகரிக்க வேண்டும்.

3. தமிழினம் பாதுகாக்கப்படல் என்றால் என்ன?

தமிழ் பாரம்பரியம், தமிழ்மொழி என்பனவற்றினை பூர்வீகமாகக் கொண்ட இனம் உலகமயமாதலினாலும், புலம்பெயர்வுகளாலும் பெரும்பான்மை இன ஆக்கிரமிப்பினாலும் தனது சுயத்தினை இழக்கக்கூடிய சாத்தியம் உள்ளது. இதனை தவிர்க்க விழிப்பு மிகவும் அவசியம். பொது நிர்வாகத்தில் தமிழ்மொழியின் பிரயோகம் சிறப்பாக அமைதல் வேண்டும். தமிழ்வரலாறு, இலக்கியம் என்பன இணையத்தில் இலகுவழியில் அனைவரும் கற்கக்கூடியதாக அமைதல் வேண்டும்.

4. தமிழ் அரசியல் தத்துவம் என்றால் என்ன?

மாற்றமடையும் உலகில், பொருளாதார, அரசியல் சூழல்களிற்கு ஏற்ப தமிழினத்தினதும் மொழியினதும் பாதுகாப்பிற்கும் தமிழர் பாரம்பரிய நிலங்களை காப்பதற்கும் மேற்கொள்ளவேண்டிய அரசியல் விஞ்ஞான அனுகுமுறைகள் இதனுள் அடங்கும்.

5. தற்போதைய சூழலில் ஈழத்தமிழரின் அரசியல் பிரக்ஞையின் அடிப்படைகள் யாவை?

மிகப்பெரிய இனப்படுகொலையினை ஈழத்தமிழினம் அண்மையில் சந்தித்தது. இதில் உலகநாடுகள் பாரமுகமாக நடந்து கொண்டன. தமிழ் அரசியல்வாதிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகளும் மருத்துவர்களும், பல்கலைக்கழக பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் மனித உரிமைகள் பற்றி சிந்தை கொள்ளவில்லை. இனப்படுகொலைக்கு அப்பால் அவதானிக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்ச்சியான இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்களமயமாதல், நில ஆக்கிரமிப்பு, மொழித்திணிப்பு என்பன உள்ளன. இது சிறுபான்மை இனம் திட்டமிட்டு அழிக்கப்படும் படிமுறையே. எனவே எமது அரசியல் பிரக்ஞை என்பது இவற்றிற்கு சனநாயக வழியில் தீர்வு காண்பதாக அமைதல் வேண்டும்.

6. ஈழத்தமிழர்களிற்கு சாத்தியமான அரசியல் தீர்வு யாது?

அரசியல் தீர்வு என்பது 100% ஜனநாயகத்தினை நிலைநாட்டுவதாக அமைதல் வேண்டும். இதனை படிகளில் விபரிக்கலாம்.

படி 1 : வடக்கு கிழக்கு என்பனவற்றிற்கு தனிமாகாண சபைகளும் அவற்றின் இராணுவ ஆளுனரின் நிர்வாகமும். இதுவே தற்போது இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்றது.

படி 2 : வடக்கு கிழக்கு என்பனவற்றிற்கு தனி மாகாண சபைகளும் பொதுச்சேவையில் உள்ள ஆளுனரின் நிர்வாகம்.

படி 3 : வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையில் 13வது திருத்தச்சட்ட அமுலாக்கமும்.

படி 4 : இலங்கையில் உள்ள சிறுபான்மை இன மக்களுக்கு சமஸ்டி முறையிலான அரசியல் அதிகாரம்.

1. தமிழ், முஸ்லீம், சிங்கள சமஸ்டி அரசுகள் - பெல்ஜியம் நாட்டு அரசியலமைப்புக்கு ஒத்தது.
2. தமிழ், முஸ்லீம், சிங்கள, மலையகத்தமிழ் மக்களிற்கு சமஸ்டி முறையிலான அரசியல் அதிகாரம். சுவிஸ்நாட்டு அரசியமைப்புக்கு ஒத்து.

படி 5 : தமிழீழ சுயநிர்ணய அரசு

7. தமிழர்களிற்கு சாத்தியமான அரசியல் தீர்வினை யார் வழங்குவார்?

தமிழர் பிரச்சினை ஒரு உள்நாட்டுப்பிரசினை அல்ல. இது இன்று சர்வதெச பரிமாணம் அடைந்துள்ளது. தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து, இந்தியா உட்பட மெற்குலகு, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் வசிக்கின்றனர். மேலும் இலங்கையில் தொடர்ச்சியான இனஅழிப்பு நிகழ்ச்சிநிரலே உள்ளது. அது ஆட்சிக்கு வரும் எக்கட்சியாயினும் உலக வல்லரசுகள் தமது நலன்சார் அரசியலேயே நிகழ்த்துகின்றனர். எனவே உடனடியாக தமிழ்மக்களிற்கு சாத்தியமான தீர்வினை ஐநா ஊடாக கூடப் பெறமுடியாது.

8. ஆயின் தமிழர்கள் கடைப்பிடிக்கவேண்டிய அரசியற்பண்புகள் யாவை?

ஈழத்தமிழ் மனிதம் என்ற சொற்பதத்தின் ஊடாக நாம் எமது வரலாற்றையும் வாழ்வையும் தக்கவைக்கவேண்டும். எமது எதிர்காலச்சந்ததியே எமது உரிமைகளை பெறவேண்டிய சூழல் ஏற்படும். அதற்கான நம்பிக்கையை நாம் எமது சமூகத்தில் விதைக்க வேண்டும். இதற்கு நேர்மை, கடினஉழைப்பு, நவீனத்துடனான கல்வி என்பன எமக்குத்தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. தர்மத்திற்கான தமிழர்கள்

## Justice Empowerment movement of Tamils

நிகழ்காலத்தின் சிந்தனையோட்டங்கள், தேவைகள் கடந்த காலத்தினைப் பார்ப்பதற்கான குவிமுனையாக அமைகின்றன. கடந்த கால நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து கொள்வதிலும் அதன் ஆழ அகலங்களை ஆராய நாம் நவீன உலகின் அன்றாட அசைவியக்கத்தின் தொடர்புசாதனங்களான கணணி வலைப்பூங்காக்களை திறமையாகக் கையாள வேண்டும். இன்று உலகின் தொடர்பு பூஜ்ஜிய நேரத்தில், பூஜ்ஜிய தூரத்தில் கணணி வலையமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஆனால் இத்தகைய வசதிகள் இருந்தும் தமிழர்களிற்கு தர்மத்திற்கான அரங்கு உலகில் கட்டி எழுப்பப்படவில்லை என்றே கூறலாம். இது ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை ஆபத்தான தொடர் இன அழிப்புக்கு இலங்கை அரசிடம் இருந்து மட்டுமல்ல, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்தும் ஏற்படலாம். இங்கு சீனா, ரஸ்சியா போன்ற நாடுகளைப்பற்றி கதைக்கத் தேவையில்லை. ஏனெனில் அங்கு மனிதஉரிமைகள் பற்றியோ, ஜனநாயகம் பற்றியோ சிறந்த தளம் இல்லை. இன அழிப்பு என்பது வெறுமனே உயிர்களின் அழிப்பு மட்டுமல்ல. மாறாக ஒரு இனத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சார எதிர்பார்ப்புக்களையும் மழுங்கடிக்கச் செய்வதும் அடங்கலாகும்.

2009ம் ஆண்டில் நடைபெற்றது தமிழ் மக்களின் பௌதீக அழிப்பு மட்டுமே. ஆனால் தமிழ் ஆத்மீகத்தினை உலகில் எவராலும் அழிக்க முடியாது. ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராக தொடரும் மனித நேய மறுப்புக்கள் குறிப்பாக இறந்தவர்கள் தொடர்பான தகவல்களின் இழுத்தடிப்பு, ஐக்கியநாடுகள் அவையில் தமிழ் மக்களின் பாதிப்புக்கள் பற்றிய நேரடிக்கரிசனை இல்லாமை, தொடர் ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் தமிழ் மக்கள் தமது அரசியல் சித்தாந்தத்தினை வரையறை செய்யும் நிலைக்குத்தள்ளியுள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மீது நடைபெற்ற மனிதஉரிமை மீறல் தொடர்பான மக்களின் சாட்சிகள், இன்று மனித உரிமை அமைப்புக்களில் செயல்படும் ஒரு சிலரால் அழிக்கப்படும் அல்லது மறைக்கப்படும் சூழல் உள்ளது. குறிப்பாக இந்திய இராணுவத்தாக்கல் தமிழ் மண்ணில் நிகழ்ந்த இனப்படுகொலைகள் மறைக்கப்பட்டு உள்ளது. மாறாக இந்திய வீரர்களிற்கு இங்கு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப்போராட்டம் தமிழர்களை புவியில் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் குறித்த எல்லைக்கு உள்ளேயே மட்டுப்படுத்தி வைத்து இருந்தது. ஆனால் இன்று பொருளாதார, அரசியல், மதரீதியில் தமிழ்மொழி பேசும் மக்களிற்கு பரந்த வெளி கிடைத்துள்ளது. இதில் மிகவும் முக்கியமானது மலையகத்து தமிழர்களது உரிமைகளை வென்றெடுத்தல் ஆகும். அடுத்தது முஸ்லீம் மதத்தவர்களிடையே தமிழ் மொழியின் தாய்த்தன்மையின் தார்ப்பரியத்தினை எடுத்து உரைத்தல் ஆகும். எனவே தாயகத்துத்தமிழர்களது தர்மம் இவற்றினை உள்ளடக்கியதாகவே அமையும். தமிழ்மக்களின் மனித உரிமைத்தேவைகள் இலங்கையில் உள்ள அனைத்துத் தமிழ் மக்களையும் ஒன்றிணைக்கும் சக்தியாக உருவாகி உள்ளது. இதனை நாம் சரியாகப் பிரயோகித்தால் எதிர் காலத்தில் தமிழர்கள் உலகில் தலை சிறந்து விளங்குவர்.

இன்று ஈழத்தமிழர் கடைப்பிடிக்கும் அமைதி மிகவும் கனதியானது. இதனை சீண்டும் நடவடிக்கைகளே உள்நாட்டில் முன்னைய ஆயுதக்குழுக்களின் அரசியலும், தேர்தல் திருவிழாக்களும் உள்ளன. சர்வதேச ரீதியில் ஈழத்தமிழரின் அமைதியை குலைக்கும் நடவடிக்கைகளே "புலி" த்தடை இது இன அழிப்பினை மேற்கொள்ள முன் அம்மக்களை மனிதனாக கருதாது செயற்படுத்தும் படியாகும். (Dehumanization) அடுத்தது ஈழம் என்ற சொல்லிற்கு இந்தியாவில் தடை. இது பார்ப்பானிய இந்தியர்களினது தமிழின வீரோதி உணர்வாகும். ஈழம் என்ற சொல் எமது பண்டைய கலாச்சாரத்தின் பெருமையை பறைசாற்றும் சொல். இதனை தடைசெய்ய எத்தனிப்பதனை உலக கலாச்சார நிறுவனம் (UNESCO) கண்டிக்க வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளில் இலங்கையில் தமிழ் மக்களிடையே இத்தகைய முரண்பாடுகளை வளர்ப்பதில் இலங்கை அரசு, இந்திய அரசு, பாகிஸ்தான் அரசு, இஸ்ரேல் அரசு என்பன முக்கிய பங்காற்றி இருந்தன. இலங்கையின் அரசியலமைப்பில் இனத்தக முரணை வளர்ப்பவர்களிற்கு அமைச்சுபதவிகள் வளங்கப்பட்டமையினை கடந்த 30 ஆண்டுகளில் கண்டு உள்ளோம். அண்மையில் இரண்டு அரசியல் கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். இது Democide என்கின்ற அரசால் இயக்கப்படும் இனப்படுகொலை ஆகும். ஆனால் அதனை கண்டிக்காமல் இருக்கும் நபர்களைத் தமிழ்மக்கள் நன்றே அறிவர்.

எனவே தமிழ் அரசியல் தலைவர்களும், அரசியல் வாதிகளும், கட்சி வேறுபாடு, பிரதேச வேறுபாடு, மதவேறுபாடு இன்றி தமிழ் மொழி பேசும் மக்களின் மனித உரிமைகளை வென்றேடுப்பதற்கான சித்தாந்த ரீதியில் ஒன்றிணைய வேண்டிய தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. "எங்கள் பகைவர்கள் எங்கே மறைந்தனர் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே" என்ற வார்த்தைகள் நிதர்சனமாகும் தன்மை இன்று ஏற்பட்டு உள்ளது. எனவே வடக்கு, கிழக்கு மலையகம் என்ற பிரதேச வேறுபாடு, இந்து, முஸ்லீம், கத்தோலிக்கம் என்ற மதவேறுபாடு இல்லாது தாய்த்தமிழ் மொழியின் இருப்பிற்காக சிறந்த அரசியல் சித்தாந்தத்தினை நாம் உருவாக்க வேண்டும்.

அரசியல் வாதிகளும் சாதாரண மனிதர்களே. எனவே அவர்களின் தனிப்பட்ட குணாம்சம் தமிழ் இனத்தின் தூரநோக்கினை சிலவேளைகளில் பாதிக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கான அரசியல் சித்தாந்தம் பலரது கருத்துக்களால் உருவாக்கப்படும் போது அது கருங்கல்லில் எழுதப்பட்ட வரிகளாகவும் மக்களின் இதயங்களில் உள்வாங்கப்பட்டதாகவும் அமையும்.

தமிழ் மக்களிற்கான தர்மச்சித்தாந்தத்தில் தமிழர்களிற்கான பாரம்பரிய நிலங்கள் வரையறை செய்யப்படலாம். தமிழர்களது பொருளாதார வாழ்வு, சமூக, கலாச்சாரவாழ்வு, அரசியல் வாழ்வு என்பன ஆராயப்படல் வேண்டும்.

அடுத்து தமிழ்மக்களிற்கு எதிரான இனப்படுகொலையின் அடிப்படை, அதனை உணராத்தன்மை, இதன் எதிர்காலத்தாக்கம் என்பன ஆராயப்படல் வேண்டும். இதில் முறைசார், முறைசாரா அணுகு முறைகளைப் பிரயோகிக்கலாம். அடுத்து தமிழ் பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறிப்பாக இராணுவ, பொருளாதார, மதரீதியான, மொழிப்பிரயோகம் ரீதியான ஆக்கிரமிப்பு நிறுத்தப்படல் வேண்டும்.

வெளிநாடுகளின் உதவியுடன் பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் தமிழரின் பாரம்பரிய நிலங்கள் சூறையாடப்படல் தவிர்க்கப்படல் வேண்டும். உதாரணமாக யாழ் குடாநாட்டில் இந்தியாவின் உதவியுடன் துறைமுக அபிவிருத்தி, விமான நிலைய விஸ்தரிப்பு என தமிழ் நிலங்கள் சூறையாடப்படுகின்றன. இதனைத்தவிர்த்து இதனைத் தவிர்த்து தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் பாலம் அமைத்தால் குறைந்த பாவனையில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகம், விமானநிலையம் உபயோகிக்கப்படலாம். திருகோணமலையில் சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பதற்காக தமிழ்மக்களின் காணிகளைக் கபளீகரம் செய்வதற்கு பதிலாக இந்தியாவில் இருந்து அணுமின்சக்தியினை நேரடியாகவே இலங்கைக்கு வழங்கலாம். இவற்றினை இந்திய அரசு தமிழ் மக்கள் சார்பாகச் சிந்திக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அரசியல் ரீதியாக கைது செய்யப்பட்டவர்கள், விசாரணை இன்றி தடுத்துவைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படல் வேண்டும். இளம் சந்ததியினை பாலியல் ரீதியாக துன்புறுத்துவதும், வருடக்கணக்காக சிறையில் அடைத்து வைத்திருப்பதும், அவர்கள் சந்ததியின்றி வாழ்வை இழக்க வைக்கும். இதுவும் ஒரு இனப்படுகொலையே. (Genocide)

அடுத்து இங்கு நடைபெறும் தேர்தல் அரசியல் தமிழ்மக்களிடையே இனத்தக முரண்பாடுகளையே தோற்றுவிக்கின்றது. இதனை தவிர்க்க சுவிஸ் நாட்டில் உள்ளது போன்ற சமஸ்டி அரசியலமைப்பு முறையே எமக்குத்தேவை. தற்போதைய தேர்தல் நடைமுறைகளால் தமிழரிடையே பிரதேசவேறுபாடு, மதவேறுபாடு அதிகரிக்கும் சாத்தியமே உள்ளது. இது இன முரண்பாடுகளை வளர்க்க துணைபோகும். இதனை நாம் கண்கூடாகப் பார்க்கக்கூடியதாக உள்ளது. வடக்கு கிழக்கு பிரிப்பு, சில தமிழ் கட்சிகளின் செயற்பாடு, முஸ்லீம் கட்சிகளின் செயற்பாடுகள், மலையக அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் இன முரண்பாட்டினை முனைவாக்கும் திசையிலேயே உள்ளன. இவற்றினை நாம் களைய எமது தமிழ் அரசியல் சித்தாந்தம் துணை புரிய வேண்டும்.

அடுத்து தமிழ் மக்கள் தொடர்பான அடிமைத்துவும் நீக்கப்படல் வேண்டும். கேள்விகள் கேட்க முடியாத நிலை, சலுகைகள் வசதிகள் இன்றிய நிலை, நீதி இன்றிய நிலை, கைதுகள், துன்புறுத்தல் முற்றாக நிறுத்தப்படுவதற்கான அரசியல் தத்துவம் வேண்டும். மேலும் புலி நாமத்தில் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தப்படல் வேண்டும். இனப்படுகொலை, அரசியல் தீர்வு கொடுக்காமை, மனித உரிமைகளை மதிக்காமை, வன்முறைகளை தூண்டல் என்பவற்றில் புலிகள் என்ற பெயரில் தமிழர்கள் அடக்கப்படுகின்றார்கள். மேலும் தென்னிலங்கையில் அரசியல்வாதிகள் விடும் தவறுகளை புலிகள் போல் செய்வதாக கூறி மக்கள் மத்தியில் புலி தமிழ் விரோதத்தினை உருவாக்குவதனை நிறுத்தல் வேண்டும்.

அடுத்து இந்தியா தனது தேசத்தில் சிறுபான்மையினை அடக்குவது போல் இலங்கையிலும் சிறுபான்மையினரை அடக்க துணை போகின்றது. தற்போது சிறுபான்மையினரது பொருளாதார வளங்கள் மீதும் தனது செல்வாக்கினைத் தவறாகச் செலுத்துகின்றது. கல்வியியாளர்களுக்கு சிறந்த மூளைச்சலவை செய்யப்பட்டு உள்ளது. இதன் வெளிப்பாடே அண்மையில் யாழ் பல்கலைக்கலையில் நடைபெற்ற சர்வதேச ஆய்வுமகாநாடு. தமிழ் அரசியல் கட்சிகளையும் தமது நிகழ்ச்சி நிரலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கிவிட்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கைக்கான இராணுவ ஒத்துழைப்புகள் தொடர்கின்றன. எனவே தமிழர்களிற்கான சிறந்த அரசியல் தத்துவமே தமிழர்களின் சமூக நலநன முதன்மைப்படுத்தும். தமிழ் மொழி மூலமான அரசியல், நிர்வாக பொருளாதார, கல்வி மேன்மை அடையக்கூடியதாக அமையும். உலக வன்முறைச்சூழ்ச்சிக்குள் தமிழ்மக்கள் மீண்டும் வீழ்ந்து விடாத தன்மை ஏற்படும்.


தமிழ் அரசியல் சித்தாத்திற்கான தளமாக நாம் இணையத்தொடர்புகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்தலாம். இதன் மூலம் பலரது ஆக்கபூர்வமான கருத்துக்கள் சுலபமாக வடிகட்டி எடுத்துவிடலாம். மேலும் சமஸ்டி அரசியலினையே இணைய வழியில் ஒரு சிலர் இணைந்து உருவாக்கி விடலாம். தமிழ் மக்களிற்கு உரிய அரசியல் விஞ்ஞானம் பல்கலைக்கழகத்தில் மானிடவியல், சமூகவியல், அரசியல், சட்டத்துறை என்பனவற்றில் சிறப்பாக நடைமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

1990ஆம் ஆண்டு நல்லூர் ஆலய சூழலில் உலங்குவானூர்தி மூலம் துப்பாக்கி பிரயோகம் செய்ய காலம் மாறி இன்று நல்லூர் தேர் திருவிழாவிற்கு உலங்கு வானூர்தியில் இருந்து பூ மாரி பொழியப்படுகின்றது. இது மிகவும் வரவேக்கக்கூடிய விடயமாகும். ஆனால் தர்மத்திற்காக இலங்கையில் தமிழருக்கு செய்ய வேண்டியவை ஏராளம் உள்ளது.. "வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல. உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற கவிதை வரிகள் இன்று சாலவும் பொருந்தும். அதாவது இறைவனுக்கு வானில் இருந்து பூ வீசுவதை விட தர்மத்தைத் தரக்கூடிய தாராள மனதையே தமிழ் மக்களுக்கு வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. 009 தமிழீழ விடுதலைப்புலிகளின் அழிப்பும் தமிழின அழிப்பும் நிகழ்ந்தவையும், நிகழ்கின்றவையும்

விடுதலைப்புலிகளின் கட்டமைப்பு அதன் தலைவரை மையமாக கொண்ட விடுதலை இலட்சிய தீவிரமுடைய கரும்புலிகளையும் அதனைச்சூழ முதலாம் ஒழுக்கில் புலனாய்வுப்புலிகளையும், இரண்டாம் ஒழுக்கில் போர்ப் பிரிவினையும், மூன்றாம் ஒழுக்கில் அரசியல் பிரிவினையும், நான்காம் ஒழுக்கில் சர்வதேச பிரிவினையும் கொண்டமைந்து இருந்தது.




விடுதலைப்புலிகள் கட்டமைப்பு உலகிலேயே மிகவும் பலம் பொருந்திய விடுதலைக்கட்டமைப்பாக விளங்கியது. தேனீக்கள் எவ்வாறு தேனைச்சேகரித்து வைத்து இருப்பனவோ அவ்வாறே அவர்களிடமும் மிகப்பெரிய செல்வம் திறைசேரியில் இருந்தது. இவர்களின் வளர்ச்சி இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளிற்கு அச்சத்தினை ஏற்படுத்தியது. இலங்கையின் வெளியுறவுக்கொள்கை அமெரிக்கா, இந்தியா சார்பாகவே இருந்த சூழலில் இந்நாடுகள் பயங்கரவாத அழிப்பு என்ற பெயரில் தமிழின அழிப்புக்கு உதவி செய்து கொண்டிருந்தனர். இந்நிலையில் சர்வதேச ஆயுதக்கொள்வனவில் புலிகளுக்காக இருந்தவர்களுக்கு சீன ஆதரவு கிடைத்தது. அதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள், ஏவுகணைகள், நீர்மூழ்கிகள் புலிகளிற்கு கிடைத்தன. புலிகளின் பலத்தின் மூலம் சீனா இலங்கையை தனக்கு அடிபணிய வைத்துவிட்டது. தற்போது வெளிநாட்டு பிரிவை இலங்கையின் தனியார் செய்மதி என்பது புலிகளால் சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட செய்மதியே. உண்மையில் புலிகள் 2012ம் ஆண்டளவில் தனித்தமிழீனத்தினை உருவாக்கத்திட்டமிட்டு இருந்தனர். இதற்கு உரிய முழுவளமும் அவர்களிடம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அறிந்த இந்தியா, அமெரிக்க போன்ற நாடுகள் பொதுமக்கள் அழிந்தாலும் பரவாயில்லை என்ற வகையில் புலிகளின் பிரதேச ஆதிக்கத்தினை 009இல் அழித்தனர்.

இதற்கு ஏதுவாக புலிகளின் அரசியல்கட்டமைப்பு 2007ம் ஆண்டில் இருந்தே நடேசனின் கட்டுப்பாட்டில் இருந்தது. வன்னியின் பொதுநிர்வாகம் இவர்களால் நடத்தப்பட்டது. இதனை கட்டுப்படுத்த இலட்சியத்துடன் தலைவருடன் இருந்த புலிகளுக்கும் இயலவில்லை. மேலும் அவ்வாறு செய்யமுயன்றிருந்தால் பாரிய உள்ளக அழிவினையே சந்திக்க வேண்டி இருந்திருக்கும். இதனாலேயே தலைவர், வன்னியில் நிகழவிருக்கும் சிங்கள இன அழிப்பினை எதிர்பார்த்து இருந்தும் அதனை தவிர்க்க முடியாத நிலையில் இருந்தார். அரசியல் பிரிவில் நிர்வாகம் நடத்த முற்பட்டவர்களுக்கும் பத்மநாதனுக்குமான தொடர்பு தலைவரை அழிக்கும் இந்தியா, அமெரிக்கா, இலங்கை சூழ்ச்சித்திட்டத்திற்கு உதவியாக அமைந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக தமக்கு பதவிகள் கிடைக்கும் என வெள்ளைக்கொடியுடன் சென்றவர்களிற்கு இலங்கை அரசு தனக்கே உரித்தான பரிசினை அளித்தது.

009 யுத்தம் என்பது இலட்சியத்துடன் இருந்தவர்கள் அழிந்துவிட்டனர். தங்களிற்கு சில பாவிகளுடன் தொடர்ந்து வாழலாம் என நினைத்தவர்கள் சிலர் கொல்லப்பட்டனர். பலர் வடமாகாண ஆளுனர். இன்று புலிகளின் அரசியல் பீடத்தில் இருந்த பலர் அவருடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இறுதியாக இலங்கை, இந்தியா, அமெரிக்காவின் குறிக்கோள்கள் நிலபுல மட்டத்தில் நிறைவேறி புலிகளை அழிக்க நினைத்து விட்டது. இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அழிக்கப்பட்டனர். இதனை ஐநா உட்பட சர்வதேசம் உலகில் மறைக்க முயற்சித்தன. ஆனால் அழிவுகளின் கானொளி ஆதாரம் உலகின் மனச்சாட்சிக்கு கேள்வியை கொடுத்து உள்ளது. இது புலிகளின் அழிக்கப்படாத புலனாய்வுக்கட்டமைப்பின் வெற்றியே ஆகும். அதாவது தமிழீழ இலட்சியம் அழிக்கப்பட முடியாது என்பதை இன்று உலகின் முழு வல்லரசுகளுக்கும் இந்தியாவிற்கும் நிருபிக்கப்பட்டு உள்ளது.

இரண்டாம் உலகப்போரில் ஐரோப்பாக்கண்டத்தினை சோவியத் ஒன்றியமும் ஐக்கிய அமெரிக்காவும் எவ்வாறு கிழக்கு மேற்காகப்பிரித்தனவோ அவ்வாறே இலங்கையின் வடக்குக்கிழக்கினை இந்தியாவும் சீனாவும் இன்று கூறுபோடுகின்றன. முன்னைய காலத்தில் நாட்டின் இறைமை என்பது இராணுவப்படைக்களால் தீர்மானிக்கப்படும். ஆனால் இன்று வடக்கு கிழக்கில் இலங்கை அரசின் நிர்வாகம் இருந்தாலும் சீனா, இந்தியா முதலீடுகளே தீர்மானிக்கப்படுகின்றது. இன்று வடக்கு கிழக்கில் இலங்கை அரசின் நிர்வாகம், அடுத்து புலிகளிடம் இருந்த அளவிடமுடியாத தங்கம் டொலர், சர்வதேசக்கடலில் உள்ள ஆயுதக்கப்பல்கள் மகிந்த குடும்பத்தின் தனிப்பட்ட சொத்தாக மாறி உள்ளது. நவீன உலகில் இந்தப் பலத்தை முறியடிப்பது என்பது கற்பனை செய்ய இயலாத ஒன்றே. துரதிஸ்டவசமாக இவையாவும் தமிழின அழிப்பும் சிங்கள பௌத்த குடியேற்றமும் என்ற தொனிப்பொருளான மகிந்த சிந்தனையின் கீழ் இயங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் நிகழ்ந்த அழிவுகள் காணொளி ஆதாரம் மூலம் ஊடகங்களால் சர்வதேசத்திற்கு பரப்பப்பட்டது. இது ஐநாவினதும் இந்தியாவினதும் முகத்திரையைக் கிழிக்கின்றது. இந்திய தமிழ் அழிப்பினை மறைக்க சர்வதேச இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டது. இறுதி யுத்தத்தில் சர்வதேச பார்வையாளர் இந்திய மருத்துவர்களே காயப்பட்டவர்களை கையாண்டனர். அவர்கள் இன்று வரை சாட்சி கூறவில்லை. காயப்பட்ட 150, 000 மேற்பட்டோர் சட்ட மருத்துவ அறிக்கைகளை அளிக்கவில்லை. தமிழ் மக்களுக்கு உதவுவது போல் பாசாங்கு செய்து தமிழின அழிப்பினை உலகிற்கு மறைக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதுபோல் சில வீடுகளை கட்டிக்கொடுத்து அவர்களது சமூக உளத்தேவைகளை பூர்த்தி செய்யாது இருப்பது பாலைவனத்தில் குடில்களை அமைத்துக் கொடுப்பதற்கு ஒப்பானது. மேலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வில் தூங்குவது போல் பாசாங்கு செய்கின்றது.

"009" சூழலில் முஸ்லீம் அரசியல்வாதிகள் இலங்கை அரசுடன் இணைந்தே செயற்பட்டனர். புலனாய்வு, திட்டமிட்ட தமிழ் முஸ்லீம் இனமோதல் என்பன நிகழ்த்தப்பட்டன. தமிழ் மக்களால் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை முஸ்லீம்கள் நிரப்பினர். சமாதானப்பேச்சுவார்த்தையினை முஸ்லீம் தலைமைகள் இலங்கை அரசுக்காக குழப்பினர். இதன்மூலம் இலங்கையில் பௌத்த மதத்திற்கு அடுத்த மதமாக இஸ்லாம் உருவாகி உள்ளது. சைவசமயம் இலங்கையில் இன்று நான்காம் நிலையை நோக்கித் தள்ளப்பட்டு உள்ளது. யுத்தத்தில் முஸ்லீம் இளம் சந்ததியினர் நேரடியாக அழிக்கப்படவில்லை. மாறாக சிங்கள தமிழ் இளைஞர்களுக்களே அழிக்கப்பட்டனர். இதனால் சனத்தொகை பெருக்கத்தில் முஸ்லீம் சமூகம் வளமாக உள்ளது. இதன் அச்சமே இன்று தொடங்கி உள்ள சிங்கள முஸ்லீம் இனமுரண்மோதல்கள்.

மதம் பிடித்த பௌத்த மதவாதம் முஸ்லீம் எதிர்ப்புடன் வடபகுதியில் சிங்கள பௌத்த விகாரைகளை கட்டி வருகின்றது. சிங்கள அரசு தனது ஸ்திரத்தினை "மேலும் உறுதிப்படுத்த இராணுவ தலைமையை மாற்றி அமைத்துவிட்டது. அவ்வாறே நீதித்துறையை மாற்றி அமைத்து விட்டது. அவ்வாறே நீதித்துறையையும் தனது கட்டுப்பாட்டிற்குள் எடுத்து விட்டது. இவை சிறுபான்மை இனங்களிற்கு மேலும் அச்சுறுத்தல். எது எவ்வாறாயினும் தற்போது உள்ள அரசை உறுதியாக்கிய சர்வதேசம் அதனை அனுகிச்செல்ல முடியுமே அன்றி விலகிச் செல்ல முடியாது உள்ளது.

தமிழர்களுக்கு சாதகமாக உள்ள தன்மைகள் தமிழியம் உலக வியாபாரமாக உள்ளது. எவ்வளவு அழிவுகளை எதிர்கொண்டபோதும் மன்னித்து முன்னேற துடிக்கின்ற மனப்பாங்கு வன்முறையைக் கைவிட்ட தன்மை. நவீனத்துடன் தமிழ் பண்பாட்டை இணைக்கும் தன்மை. இணைய வியாபகத்தினை முற்றாக உபயோகித்தல் என்பனவாகும். இன்று உலக மாற்றத்தில் தீர்மானம் எடுக்கும் சக்தியாக கீழ்மட்டம் உள்ளது. எம்மால் ஐநாவிற்கு அழுத்தம் கொடுக்க கூடியதாக 009 இழப்புக்கள் அமைந்துவிட்டன. மனிதகுல முன்னேற்றத்தில் ஈழ தமிழர்களை இறுக்கமாக இணைப்பதனால் இன அழிவில் இருந்து மீளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை வாக்கெடுப்பு ஜனநாயகத்தினால் நவீன ஆயுதங்கள் கொண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அழிக்கப்பட்டு சிறுபான்மை ஆக்கப்பட்டு விட்டனர். அதே வகையான ஆயுத அச்சுறுத்தல் வடமாகாணத்தில் தொடர்கின்றது. இதனால் வடமாகாணத்திலும் தமிழர்கள சிறுபான்மையினராக்கப்படலாம். இவற்றினை எதிர்கொள்ள தமிழர் நாம் நாமாகவே இருக்கக்கற்று கொள்ளவேண்டும். எமது இளம் சமூகத்தினை அழிக்க போதைப்பொருள், இரவுக்கெளிக்கைகள் மதுப்பாவனை, விபச்சாரம் என்பன நன்கு திட்டமிட்டு நிறுவப்படுகின்றது.

இலங்கையின் அரசியல் மையம் யாழ்ப்பாண குடாநாட்டிலேயே கருக்கொண்டு உள்ளது. சகல தீர்மானங்களையும் எடுக்கும் இராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் வந்து செல்கின்றனர். இங்கு பல துணைத்தூதரகங்கள் அமைக்கும் ஏது நிலை உள்ளது. யாழ்ப்பாணத்தினை சீனா, இந்தியாவின் அணுத்திட்ட நகர்வுகளையும் தென்பிராந்திய பாதுகாப்பு நிலைகளையும் இலகுவில் கண்காணிப்பதற்காக உபயோகிக்க உள்ளது. யாழ்ப்பாண மக்களின் உறவினை இந்தியா மீண்டும் சுதந்திரத்திற்கு முன்பான நிலைக்கு கொண்டு வருவதற்கோ அல்லது இந்தியாவின் எதிரிகள் நுழையாது அவதானிக்கும் புள்ளியாக மாற்றவும் நினைக்கின்றது.

யாழ்ப்பாண முஸ்லீம்கள் மூலம் பாகிஸ்தான் இஸ்லாமியத்தீவிரத்தினை மூலம் இந்தியாவின் தென்கொடியில் ஓர் அழுத்தத்தினை உருவாக்க முனைகின்றது. இதற்காக அடிப்படை மதச்சார்பு கற்கைகள். மன்னர், யாழ்ப்பாணத்தில் ஊட்டப்படுகின்றன. யாழ்ப்பாணத்தினை மையமாக வைத்து தமிழகத்திழனையும், தென் தமிழிக மாநிலங்களிலும் கூடுதல் ஜனநாயகம் என்ற பெயரில் இந்தியாவில் மேலும் பல குடியரசுக்களை உருவாக்க அமெரிக்கா விரும்புகின்றது.


தமிழ் மக்கள் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தினை பிரதான கிராமங்கள் யாவும் குட்டி நாடுகள் போல் உலகம் எங்கும் தமது பிரதிநிதிகளை வைத்து உள்ளது போல் உள்ளனர். எனவே சிறந்த நவீன தொடர்பாடல் மூலம் தமிழையும் தமிழ் பண்பாட்டினையும் காக்கும் வல்லமை அவர்களிற்கு உண்டு.

உலகம் எவ்வாறு உள்ளது அது ஏன் தமிழர் மீது கரிசனை காட்டவில்லை என்பதனை ஆழ்ந்து சிந்தித்தால் நாம் நாமாக வாழ்ந்தால் எம்மை யாரும் வெல்லமுடியாது. எனவே நாம் எம்மைத் தொலைக்காது காப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ஈழத்தமிழர் இனப்பிரச்சினையின் வியாபகம்

$$\sum_{n=1}^{5} T = R \int \quad \frac{dt}{dx}\ \delta t\ Sina\ cos + KT1$$




**$T_1$ =** இன முரண்பாடு சார்பான வியாபகம்

$T_2$ = அரசியல் அமைப்பு சார்பான வியாபாகம்

$T_3$ = தமிழின அழிப்பு சார்பான வியாபாகம்

$T_4$ = தமிழின மீள்கட்டமைப்பில் உள்ள தடங்கலில் வியாபகம்

$T_5$ = மானிட முன்னேற்றத்திற்கான பாதையில் தமிழினம் செல்வதற்கான தடங்களின் வியாபகம்

### ஈழத்தமிழர் இருப்பு

1. இனமுரண்பாடு

இது அரசியலமைப்புக்கு அப்பாலானது. வரலாற்று ரீதியானது. சந்ததிக்கு சந்ததி கடத்தப்பட்டு வந்து உள்ளது. தமிழ் - சிங்கள முரண்பாடு. தமிழனை அழிக்கும் உருவகமே சிங்கம். தமிழனை வெட்டும் உருவகமே வாள். இவை மகாவம்சத்தின் ஊடு. சிங்கள பௌத்தங்களிற்கு பௌத்தவிகாரையில் சுமார் 2000 ஆண்டுகளாக கற்பிக்கப்படுவது, இதன் சர்வதேச அங்கீகாரமே வாளேந்திய சிங்கம், தமிழ், முஸ்லீம்களை வெட்டுவது போல் இலங்கை கொடியில் உள்ளது. எனவே இனமுரண்பாட்டை ஆராயலாம். வரலாற்றியல் சமூகவியல், தொல்லியல், சமூகவியல், நவீன மானிடத்திற்கான சமூகவியல் அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அரசியலமைப்பு

இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றபின் உருவாக்கப்பட்ட அரசியமைப்பு சிங்கள பெரும்பான்மையினை ஆட்சிசெய்யும் முகமாக அமைந்து உள்ளது. அரசயிலமைப்பு என்பது இனமுரண்பாட்டிற்கு உரிய தீர்வுக்காக அல்ல. மாறாக பொதுவாக நிர்வாகத்தினை இலகுபடுத்துவதாகும். ஆனால் துரதிஸ்சவசமாக இலங்கை அரசியலமைப்பு, சிறுபான்மை இனங்களை மேலும் ஒடுக்குவதற்காவே பயன்பட்டுவருகின்றது.

3. இன அழிப்பு

காலம் காலமாக தமிழினம் கொத்துக்கொத்தாக அழிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு உள்நாட்டில் முறையான நீதி விசாரணை இல்லை. சர்வதேசமும் பாராமுகமாகவே உள்ளது. இனவழிப்பின் பரிமாணங்கள் நவீன விஞ்ஞானத்திட்டம் பெருகிக் கொண்டே செல்கின்றது.

4. மீள் கட்டமைப்பு

சுதந்திரமான சமூகம்
மீள்குடியேற்றம்
புனர்வாழ்வு
சிங்கள குடியேற்றம் ஆக்கப்படல், இராணுவம் விலத்தல்

5. மானிட முன்னேற்றம்

தேவை நோக்கிய கல்வி
தமிழ் மொழி முன்னேற்றறம்
சுகாதார முன்னேற்றம்
ஆய்வுகள்

1. இன முரண்பாடு நீங்கல்
2. அரசிலமைப்பு சமத்துவம் ஏற்படல்
3. இன அழிப்பு நிறுத்தப்படல்
4. மீள்கட்டமைப்பு உருவாக்கப்படல்
5. மானிட முன்னேற்றம் ஏற்படல்.

சமூக அரசியல் பிரக்ஞை

அரசியலமைப்பு மேலாதிக்கமும், இராணுவ பல மேலாதிக்கமும் அரசியல் நடத்தப்படுகின்றது. கருத்துச்சுதந்திரம் இல்லை. இதன் உச்சமே இணைத்தடைகள். மக்களுக்க அரசியலில் பரந்த கருத்து வெளிப்பாடு அடக்கப்பட்டு உள்ளன. பல்கலைக்கழக மாணவர்களும் அவ்வாறே. சமூக அறிவியல் பிரவாம் குறைவாகவே உள்ளது.

அபிவிருத்தி என்பதற்கும், ஆக்கிரமிப்பு என்பதற்கும் நெருங்கிய தொடர்பான விருத்தியே இங்கு நிகழ்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. தமிழியம்

நிசப்தமான செயல்கள்

தமிழ் இனத்தை அழிக்கும் செயல்கள்

மௌனமான குரல்கள்

மனிதநேயத்தை காக்கவேண்டிய குரல்கள்

அசைபயான தமிழ்

விழித்திட வேண்டிய சமூகம்

சத்தம் இன்றிய யுத்தம்

சத்தியத்தினை அழிக்குது நித்தம்

அரவம் அற்ற மொழித்திணிப்பு

பிரவகம் எடுத்துள்ளது இங்கே

ஓசை இல்லா கூத்துக்கள் - எம்

ஒர்மத்தை அழிக்குது கண்டீர்

அமைதி என்பதற்கு புதுவடிவம்

அகதியாகக் கண்டீர்

தமிழிற்கு ஓர் ஓங்காரம் - அது

தமிழியமாக ஒலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. தமிழே தமிழே உயிர்த்தெழு

எங்கள் தமிழினம் அழியுதோ
எங்கள் தாய்நிலம் ஒழியுதோ
தமிழே தமிழே விழித்தெழு
தமிழே தமிழே உயிர்த்தெழு

அடிமையாக வாழும் நிலை வேண்டாம்
குடிமையாக வாழும் நிலை வேண்டாம்
பொறுமையாக இருந்த நிலை போதும்
ஒற்றுமையாக குரல் கொடுப்போம்.

அரசியலில் சமஉரிமை எமக்கு இங்கில்லைக்கண்டீர்.
அடக்குமுறையின் உச்சத்தில் இங்கு வாழ்கின்றோம் கண்டீர்.
அகதியாக அலையும் வாழ்விற்கு முற்றிடல் வேண்டும் கண்டீர்.
அழிந்த எம் பொருளியலை மீட்டிடல் வேண்டும் கண்டீர்.

சுதந்திரத்தைக்கேட்டுப் பெற முடியவில்லைக் கேளீர்
சுதந்திரத்தைப் போராடிப் பெறமுடியவில்லை கேளீர்
சுதந்திரத்தை அனுபவித்து அடையமுடியவில்லைப் பாரீர்
ஆறவில்லை நாம் நம்பிக்கை தளரவில்லை என்றும்
ஆறாகிப் பெருகிடுவோம் தரணியிலே நாம் தமிழராய்!

தமிழுக்கோ இன அழிப்பு அது சிங்களத்திற்கு வெற்றிப்புளகாங்கிதம்!
ஓட ஓட குண்டு மழை கனரக ஆயுதங்களால் எம்மக்கள் மீது!
உண்ண உணவு இல்லை! அருந்த நீர் இல்லை காயத்திற்கு மருந்து இல்லை!
சுவாசமோ கந்தகக்காற்றில்! - இவையே
சிங்களத்தின் வெற்றி! — மானிடத்தின் தோல்வி

மிருகம் மனிதனானான் மகாவம்சக்கதையில் அன்று
மனிதன் மிருகமானான் முள்ளிவாய்க்காலில் நிஜத்தில் இன்று
செஞ்சிலுவையின் மனச்சாட்சி ஐநாவின் மனச்சாட்சி
வஞ்சமகமாக மறைந்ததனை நாம் மறப்போமா

சித்திரவதை, கற்பழிப்பு, கொலை இவை யாவும்
பத்திரமாக அலைபேசியில் மகிழ்வுடன் பதிந்த காமுர்களின் வெற்றிப்புளகாங்கிதம்
நாடு கடத்தப்பட்ட வம்சத்திற்கு ஒரு நாடாம் - அது
நாடு வென்ற தமிழனுக்கு இடுகாடாம்

இந்நிலையை நாம் ஒருபோதும் ஏற்கோம்
நாற்பத்தெட்டில் அநாதையானோம் பிரஜாஉரிமைச்சட்டத்தில்
ஐம்பத்தெட்டில் தொடங்கி, எழுபத்திஎட்டு, என்பத்து மூன்றில் அழிக்கப்பட்டு அகதியானோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்து எட்டில் தொடங்கி ஒன்பது வரை தமிழினம் பயங்கரவாதிகளாக

அஃதே
அழிந்தததுே
வ

காட்டிக்கொடுப்புக்கள் எம்மிடையே வேண்டாம்.
வீண்விதன்டா வாதங்கள் எம்மிடையே வேண்டாம்.
ஏமாற்று வித்தைகள் எமக்கிடையே வேண்டாம்.
பதவி ஆசைகள் என்றும் எமக்கிடையே இனி வேண்டாம்.

நாம் அடிமைகள் அல்லர் ஆங்கிலேயரால் கையளிக்கப்பட்ட கொத்தடிமைகளும் அல்லர்

எம்மினத்தின் அழிப்பு தங்கத்தை புடமிட்டது போன்றே
தமிழன உணர்வை மேலோங்கச்செய்கின்றது காண்பீர்
தமிழாய், தமிழியமாய்ப் பொங்கி எழுவோம்
தமிழன் வாழும் ஈழமே தமிழீழம் - காண்பீர்
அதனைக்கூறிட தமிழுக்கு உரிமையுண்டு – கேளீர்

மக்கள் மாக்கள் அல்லர் கண்டீர் - இம்மாநிலத்தே
மானிடன் அடிமையல்ல கண்டீர் - எம்மினத்தில்
மாவழிவு கண்டீர் ஈழத்தமிழினம்
மாபுரட்சி காணும் காலம் அருகில் காண்பீர்

எம்மினத்தின் விடுதலைக்கு ஆயுதங்கள் இனித்தேவையில்லை
எம்மினத்தின் விடுதலைக்கு அதிசயங்கள் இனித்தேவையில்லை
எம்மினத்தின் விடுதலைக்கு நம்பிக்கையே இனித்தேவை!
எம்மினத்தின் விடுதலைக்கு ஒற்றுமையே இனித்தேவை!

நம்புங்கள் நாளை நமக்கு நல்ல காலம்
ஒம்புங்கள் ஒழுக்கத்தினை ஒர்மத்துடனே
வீம்புகள் வேண்டாம் வீண்வீணர்களுடன்
தோம்புகள் தோறும் நம் பெருமையினை ஒச்சிடுவோம்.

மாறா மறவர்கள் நாம் மண்டியிடோம் மண்ணை மீட்காது
அன்புடனே கேட்கின்றோம் எம்மை அடக்காதீர்
அன்புடனே கேட்கின்றோம் எம்மை ஆக்கிரமிக்காதீர்
அன்புடனே கேட்கின்றோம் எம்மை அழிக்காதீர்

உலகமே ஒரு கணம் மனதைத்திறந்து பார் - எம்
இனத்தை இடத்தை அபகரித்து இடக்கரடக்கலால்
தமிழை அழிக்கும் உபாயம் கண்டீர்
காலம் காலமாக தோற்றும் போராடினோம்
காலம் காலமாகப் போராடித் தோற்றோம்
நேற்றுப் போன வாழ்வில் இருப்பது தாழ்வல்ல கண்டீர்
சாற்றுவதற்கு கலைவீர் மௌனம் - இன்றே காண்பீர்
போற்றிடுவோம் எம்மினப் பெருமையினை என்றும் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. வடமாகாணச்சபைத் தேர்தல்கள்

1. தேர்தலில் இளவயதினர் குறிப்பாக 20-30 வயதுடையோர் வேட்பாளராக உள்ளடக்கப்படல் வேண்டும்.
2. தேர்தலுக்கு முன் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும்.
3. பொதுமன்னிப்பு அளிக்கப்படல் வேண்டும்.
4. பூரண கருத்துச்சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும்.
5. இராணுவ மேலாதிக்கம், ஆயுதக்குழுக்களின் மேலாதிக்கம், வர்த்தகர்களின் மேலாதிக்கம் இருத்தல் கூடாது.
6. உணர்ச்சி அரசியல் மேற்கொள்ளல் ஆகாது.
7. இன, மொழி, மதத்துவேசம் தூண்டப்படல் ஆகாது.
8. யாழ் தேவியில் ஆட்டின் ஊனை மாகாண உண்பதற்கு அடிபடுவடுவது போல் வட தேர்தல் ஒட்டி, தமிழ் அரசியல் ஒற்றுமையை குலைக்கும் மோதல்களை தவிர்க்க வேண்டும்.
9. மாற்றமடையும் புதிய பொருளாதார உலக ஒழுங்கில் தமிழனத்தைத் தக்க வைக்கக்கூடிய அரசியல் சமூகப்பிரக்ஜை மிகவும் இன்றி அமையாதது. இதற்கு கல்வி, கடின உழைப்பு, நேர்மை என்பனவையே தேவை.

இலங்கையில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புகளை ஆராயும்போது இதற்கு கொத்தலாவல, நேரு ஒப்பந்தம், சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் என்பனவும் ஒரு ஏது நிலைக்காரணிகளாகும். இவ்வொப்பந்தங்களின் அடிப்படையிலேயே இலங்கையில் தமிழர்கள், தமது பிரஜா உரிமையினை இழந்தனர். இவ்வொப்பந்தம் தமிழருக்கு எதிராக வட இந்தியராலும், சிங்களவர்களாலும் மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் மலையகத்தில் இருந்து பெருமளவு தமிழர்கள் 1977 சிங்கள இனக்கலவரத்தில், 1983இல் வன்னி பாதுகாப்பிற்காக தப்பி வந்தனர். இறுதியாக இவர்களில் சுமார் 25% மானோர் 2009இல் அழிக்கப்பட்டனர்.

எனவே தமிழக சட்டசபை சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தினை இரத்துச் செய்யத் தீர்மானம் எடுத்தல் வேண்டும். மேலும் சிறிமாசாஸ்திரி ஒப்பந்ததினாலேயே மலையக மக்கள் அடிப்படை வசதி குறைந்து, கல்வி வசதி, மருந்து வசதி என்பன இரண்டாம் தரத்தில் வைக்கப்பட ஏதுவாக அமைந்து உள்ளது.

இறுதியாக சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் சட்டவிரோதமானது அது அதில் சம்பந்தபட்ட தமிழ் மக்களின் சம்மதத்தினைப் பெற்று இருக்கவில்லை என இந்திய உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பினை பெறல் வேண்டும். அடுத்து இது தமிழின அழிப்பு அடிப்படையானது என்பதனையும் அவதானித்தல் வேண்டும்.

2009ம் ஆண்டு இந்திய 15வது லேக்சபாத் தேர்தலில் 714 மில்லியன் வாக்காளர்கள் பங்களித்தனர். 835000 வாக்களிப்பு நிலையங்கள் செயற்பட்டன. 1.2 மில்லியன் வாக்களிக்கும் இயந்திரங்கள் பயன்பட்டன. 11 மில்லியன் தேர்தல் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். உலகின் மிகப்பெரிய முகாமைத்துவ நடவடிக்கையாகச் சாதனை படைத்தது. இத்தேர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகளை முள்ளிவாய்க்காலில் பிணமாகிய ஒவ்வொரு இதயங்களும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தன. முடிவு உலகின் மிகப்பெரும் ஜனநாய நாட்டின் அரசின் முடிவால் சிறுபான்மைத்தமிழினம் வன்னியில் பொசுக்கப்பட்டது. அதனை இன்று 4 வருடங்கள் கடந்த நிலையிலும் உணருவார் யாரும் இல்லை. சர்வதிகாரத்தால் யூதர்களை ஹிட்லர் அன்று அழித்தான். ஆனால் பெரும்பான்மை ஜனநாயகத்தால் இந்தியரும் சிங்களவரும் இன்று தமிழரை அழித்தனர்.

ஆனால் மாகாண சபைத்தேர்தலும் தமிழ்கூட்டமைப்பும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் 2009இல் எவ்வாறு பலரது இலட்சியமற்ற முகங்கள் வெளிப்பட்டனவோ அவ்வாறே 2013ம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்க்கூட்டமைப்பின் உண்மை முகம், தமிழீனத்தின் மீதான அலட்சியத்தன்மை வெளிப்பட்டு உள்ளது.

நான் ஒரு மருத்துவராக 1998ம் ஆண்டில் இருந்து தமிழ் மக்களிற்கு ஏற்பட்டுள்ள மனிதபிமான நெருக்கடிகள், மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமாகக் கருத்து வெளியிட்டு வருபவன். இதே காலப்பகுதியில் இலங்கையின் உயர்நீதிமன்றத்தில் கடமையாற்றிய நபர், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட மனித உரிமைமீறல்கள், இனவழிப்பு என்பனவற்றிற்கு குரல் கொடுக்காது பூனை பாலைப்பார்த்து தூங்குவது போல் இருந்து இலங்கை அரசினை சர்வதேச ரீதியில் நீதித்துறை மூலம் காப்பாற்றிவிட்டு, தற்போது தமிழ்க்கூட்டமைப்பு மூலம் முதலமைச்சராக துடிப்பது ஒரு முரண்நடையாகும். சுமார் மூப்பது வருடங்களுக்கு முன் காசி ஆனந்தன் அவர்களை விடுதலைக்காக குரல் கொடுத்தற்காக தமிழரின் நீதிமன்றில் விசாரித்தவர். இவர் தமிழரசுக் கட்சியினை ஏளனம் செய்து நகையாடியவர் இவர். ஈற்றில் வன்னியில் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டு இருந்தபோது கொழும்பில் கம்பன் விழா எடுத்து உலகை ஏமாற்றியவர்.

தற்போது இவரது வயதுமுதிர்ச்சியும் ஆழமான அறிவும் ஒரு சிறந்த அரசியல் வாதியாக மாற்றலாம் என சிலர் கனவு காணலாம். மூாறாக இவர் முதலமைச்சராக வந்து தனது இயற்கையான சுபாபத்தினை வெளிப்படுத்தினால், இலங்கையில் நடைபெற்ற தமிழினப்படுகொலைகள், உலகநீதியினை நாடிச்செல்லல் முற்றாகத் ஸ்தம்பிதம் அடைந்துவிடும். தமிழ் மக்களுக்கு என ஒரு சுயநிர்ணய அரசு உருவாக்கம் இல்லாது போய்விடும். ஏனெனில் உலகநாடுகள் பாலைக்கண்டு தூங்கும் பூனையை நம்பும் அல்லது உலகநாடுகளின் விருப்பமும் அதுவாகவே இருக்கும். ஏனெனில் 2009 தமிழின படுகொலை என்பது சர்வதேசத்தின் ஒட்டுமொத்த கூட்டு அழிப்பாகும்.

இதில் 1வது குற்றவாளி, 2வது குற்றவாளி எனப்பட்டியலிடத் தற்போது ஈழத்தமிழனிடம் பலம் இல்லை. ஆனால் இம் மாகாணசபைத்தேர்தலினை முற்றாகப் புறக்கணித்து எமது எதிர்ப்பினை அகிம்சை வழியில் காட்டமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009இல்.......

1. ஏன் அழித்தார்கள்
2. அழிவின் ஆழம்
3. ஏற்றுக்கொள்ளாமை

அழித்தமைக்கான காரணங்கள்

1. தமிழ் விரோதம்
2. புலி விரோதம்
3. இனத்துவேசம் - மத வரலாறு, வாழ்வியல், மொழி, தொடர்பாடல்
4. பழிவாங்கல்
5. நவீன தொழில்நுட்பத்தின் பிரயோகம்
6. பல்தேசிய ஆதரவு

ஏன் ஏற்றுக்கொள்ளாமை

1. தமிழர் ஒற்றுமை இன்மை
2. விஞ்ஞான பூர்வமாக எடுத்துக்கூற முடியாது?

    உடலில் அடைய / காயம்

    சாட்சி

3. தமிழ் துறைசார் நிபுணர்களின் பங்களிப்பு / ஈடுபாடு குறைவு
4. இலாபநோக்கம் கருதிய உலகம்
5. தொடர் அடக்குமுறை

ஈழத்தமிழர் சமூக பிரக்ஞை

1. எதிர்பார்ப்புகள்

    அபிலாசைகள்

    1. தமிழ்மொழி, பண்பாடு, வாழிடப்பாதுகாப்பு
    2. அரசியல் உரிமை
    3. தமிழ் தேசம் உருவாக்கம்

2. நடந்தவை

    1. இன அழிப்பு
    2. போர்க்குற்றம்
    3. நில ஆக்கிரமிப்பு
    4. இராணுவ ஆக்கிரமிப்பு

சமூக விஞ்ஞான பொறிமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தனிமனிதரால் மாற்றப்படக்கூடாது.
2. அரசியல் கட்சிகளால் மாற்றப்படக்கூடாது
3. பேரம் பேசக்கூடாது / விற்பனைப்பொருளல்ல.
4. அரசியல் போட்டியால் பாதிக்கப்படக்கூடாது.

நன்மைகள்

1. வழி – Road Map
2. தனிநபர்கள், கட்சிகள், பத்திரிகை நிறுவனங்கள் தாக்கப்படுவதனைத் தவிர்க்கலாம்
3. தேர்தல் அரசியலுக்கு அப்பால் மொழி ரீதியான அரசியலை நேர்மையாக எடுத்துச்செல்லலாம்.

தமிழ் சிங்கள இடைவெளி

1. ஆட்சி செய்தல்
2. ஆளப்படுதல்
3. ஆக்கிரமிப்பு
4. அடக்குமுறை
5. 2009 இன அழிப்பு நடந்தமை
6. வெருட்டல்
7. அலட்சியம்
8. ஏளனம்
9. ஏமாற்று
10. போலி
11. தமிழரின் தேவைகளை ஏற்றுக்கொள்ளல்.
12. நஸ்ட வீடு வழங்கல்
13. அதிகாரத்துடன் வாழவிடல்
14. தமிழ்மொழி பண்பாட்டை பாதுகாக்க உதவல்.

அனர்த்தங்களால் சீர்குலையும் தமிழர்களின் சமூகக்கட்டமைப்பு அதனை எதிர்கொள்ள தன்னிறைவான திட்டங்கள் தேவை

பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி, சூழல் நெருக்கடி என்பன நாம் அன்றாடம் கேள்விப்படும் சொற்கள் ஆகும். நெருக்கடி நிலையில் ஒரு பிரச்சினைக்குத் தீர்வுகாணல் கடினமாக அமையும். ஆனால் நெருக்கடி நிலை அதனை எதிர்கொள்பவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது. சீன மொழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாய்ப்பு" என்பதற்கும் "நெருக்கடி" என்பதற்கும் ஒரே சொல் தான் பயன்படுத்தப்படுகின்றது. அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி ஒபாமாவுக்கு வாய்ப்பினைக் கொடுத்தது. உலக வெப்பமடைதல் நெருக்கடி சமாதானத்திற்கான நோபல் பரிசினைத் தட்டிச் சென்றது. எனவே எந்தவொரு நெருக்கடியையும் நேர்மறையான கண்ணோட்டத்தில் பார்க்க பழகிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நெருக்கடிக்குள்ளும் ஒரு வாய்ப்பு ஒளிந்து கொண்டு உள்ளது என உறுதியாக நம்ப வேண்டும். எமது உரமிடுவதும், எமது வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பதும் நெருக்கடிகள் தான். மேலும் ஒவ்வொரு மனிதனின் உண்மையான திறமையினை எடைபோடும் சந்தர்ப்பம் நெருக்கடிதான்.

வெற்றி என்பது வாய்ப்பினைச் சரியாகப் பயன்படுத்துவதில் தங்கியுள்ளது. பிரச்சினைகளைத் தீர்ப்பதில் புதுமையான அணுகுமுறைகள் தேவை. யதார்த்தத்தினை புறக்கணித்தால் உலகில் எமக்கு இடமில்லை என்ற நிலை வந்துவிடும். நெருக்கடிகள் எமக்குக்கற்றுத்தரும் பாடங்களை எமது எதிர்காலச் சாதனைகளுக்கான படிக்கட்டுகளாகப் பயன்படுத்த வேண்டும்.

இலங்கைத்தமிழர்கள் தற்போது பாரிய நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். இது சிக்கலான அரசியல் அபாய நிலை ஆகும். இதில் அரசியல் கூறு, சமூக உளவியற்கூறு, பாதுகாப்புக்கூறு என்பன அடங்கியுள்ளன. இதனைத் தீர்ப்பதற்குப் பூரணமான அணுகுமுறை தேவை. ஏன் நாங்கள் எமது சமூகத்தினைப்பற்றிக் கரிசனை கொள்ள வேண்டும்.? இது அவசியம் தானா? ஆம் ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்காலம் பற்றியும் தனது குடும்பம் பற்றியும் கரிசனை கொள்வான். அதுபோலவே அவனுக்கு அவனது சமூகம் பற்றிய கரிசனையும் அவசியம். எனவே நாங்கள் எமது சமூகத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றியும், எமது சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவுவது என்பது பற்றியும், எமது சமூகத்தின் எதிர்கால நலன் பற்றியும் கட்டாயம் சிந்திக்க வேண்டும்.

சமாதானத்திற்கு அடிப்படை, தவறுகளை மன்னித்தல், இதற்கு சமயத்தலைவர்களதும், அரசியல் தலைவர்களதும் பங்களிப்பு இன்றியமையாதது. அடுத்தது முரண்பாடுகளைத் தீர்த்தல் உலக இயக்கமே முரண்பாடுகளால் ஆனது. முரண்பாடுகள் என்பது சமூக வாழ்வின் அடிப்படை. அந்த வகையில் எமது முரண்பாடுகளை நாம் ஆராய வேண்டும். இதனை உள்ளக ரீதியில் மட்டும் ஆராயாது பல வழிகளிலும் ஆராய வேண்டும். இவை சமூக விஞ்ஞானத்தின் அடிப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கருத்தில் கொள்ளாது ஒரு பிரச்சினையும் இல்லை. தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தடுத்துவைத்திருத்தல் மிகப்பெரிய தவறாகும். மேலும் இவர்களைத் தொடர்ந்து இவ்வாறு வைத்திருத்தல் இந்த உலகில் நிகழத்தக்க பாரிய சமூக உளச்சித்திரவதையாகும்.

அடுத்தது அரசியல் தீர்வு வழங்கல் என்பது நடுநிலையான அரசியல் விஞ்ஞானிகளால் வரையப்படல் வேண்டும்.

அடுத்தது சமூக உள நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதாகும். இது மிகப்பெரிய சவால் ஆகும். தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சமூக உள நெருக்கடிக்களைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

ஒரு சமூகம் பாதிப்படையாது இருப்பதற்கு ஆக அமைதல் வேண்டும்.

இதனைச் சமூக மருத்துவர்களும், சமூகப் பொறியியலாளர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்தத்தினால் பல நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவை உளத்தாக்கங்களையும், உள நோய்களையும், குடும்பப் பிரச்சினைகளையும், சமூக மாற்றத்தினையும் ஏற்படுத்தி வருகின்றது.

அனர்த்தங்களினால் ஏற்படும் நேரடி நெருக்கீடுகளாக உயிரிழப்பு, உடலங்கங்கள் இழப்பு, சித்திரவதைக்குட்படல், கற்பழிப்பு என்பனவற்றைக் குறிப்பிடலாம். நெருக்கீடுகளின் தாக்கம் ஒவ்வொரு மனிதனுக்கும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படும். ஒரே நெருக்கீடு வெவ்வேறு மனிதரில் வெவ்வேறு வெளிப்பாடுகளாக மாற்றமுறும். இவற்றை உறவுச்சிக்கல், உடல் மாய நோய்கள், பதகளிப்பு, உளத்தாக்கத்திற்குப் பின்பான மனவடுநோய் என வகைப்படுத்தலாம்.இவை குடும்பத்தின் பொருளாதார விருத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இந்நிலையில் பொருளாதார உதவிகள் செய்தல், நோய்கள் உருவாகுதலையோ, நோயின் தாக்கம் கூடுதலையோ, தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதையோ குறைக்கும். நுண்விருத்தியில், அதாவது குடும்பப் பொருளாதார உதவிகள் செய்தல், நோய்கள் உருவாகுதலையோ, நோயின் தாக்கம் கூடுதலையோ, தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதையோ குறைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்நிதியவிருத்தியில், அதாவது குடும்பப் பொருளாதார முயற்சியை மேற்கொள்ள முடியாமையினால் வன்முறைக்கு ஆரம்பப்படிகளான கோபம், விரக்தி, பழிவாங்கும் எண்ணம் என்பன தோன்றின. ஆனால், அந்நிலையின் நிதி வளர்ச்சிக்கு உரிய செயலாக்கங்கள் இருந்தன. ஆனால் இன்று மனித உற்பத்திவலு யுத்தத்திற்கே செலவாக்கப்பட்டதால், பொரளாதார வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. எனவே ஆக்க வேலைகளுக்கான மனித வலுச் செயற்பாட்டை அதிகரிக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளல்படல் வேண்டும்.

*அனர்த்தங்களின் தாக்கம்.*

இத்தகைய அனர்த்தங்களினால் குடும்பப் பொருளாதாரக் கட்டமைப்பு சீர்குலையும் போது, தங்கி வாழும் மனப்பான்மை கூடும். ஊக்கமுயற்சி குன்றும். இதனால் நிவாரணம், வெளிநாட்டு உறவினர்களின் உதவி என்பன தேவைப்படுகின்றது. சிலர் தமது தேவைகளைக் குறைத்துக்கொள்கின்றனர். இருவேளை உணவை மட்டும் உண்கின்றனர். போசணை மிக்க உணவை உண்பதில்லை. இதனால் அல்லூட்டம் ஏற்படுகின்றது. பொருளாதார சீர்குலைவை எதிர்கொள்ளச் சமூகத்திற்கு ஒவ்வாத நடைமுறைகளாகக் களவு, கொள்ளை என்பன வெவ்வேறு மட்டங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது அதிகாரிகள், அரசியல்வாதிகள், வர்த்தகர்கள் என்போர் உயர் மட்டத்திலும் சுரண்டல்களை மேற்கொள்கின்றார்கள். அடிமட்டத்தில் உள்ளவர்கள் வீடுகளை உடைத்துப் பொதுச்சொத்துக்களை அல்லது தனியார் உடைமைகளை அபகரிக்கின்றனர். மேலும் சட்டவிரோத மதுபாவனை, பாலியல் துர்நடத்தைகள் அதிகரிக்கின்றன. எதிர்காலச் சந்ததியின் கல்வி சீர்கெடுகின்றது. பாடசாலைக்குச் செல்ல முடியாமை. பாடசாலையிலிருந்து விலகல், வேலைக்குச் செல்லல் என்பன அதிகரிக்கின்றது.

எனவே, அனர்த்தங்களினால் நுண்நிதிய வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது என்பது பற்றிய விழிப்புணர்வும், இதனால் குடும்பக்கட்டமைப்பு, சமூகக் கட்டமைப்புச் சீர்குலைகின்றது என்பது பற்றிய அறிவும் பொதுமக்களுக்கு இருத்தல் அவசியம். இதனை எதிர்கொள்ளச் சுயமுயற்சியுடன் கூடிய தன்னிறைவுப் பொருளாதாரத் திட்டங்கள் கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளல்படல் வேண்டும். மேலும் கல்விச் செயற்பாடுகளில் தொழில்நுட்பத்துறையும், சமூக மேம்பாட்டு விழுமியங்கள் சார்பான அறிவூட்டல்களும் இணைக்கப்பட வேண்டும். நுண்நிதிய விருத்தியில் சேமிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையினை அதிகரிக்க வேண்டும். தேவையற்ற ஆடம்பரப் பொருள்களில் முதலீடு செய்தல் தவறாகும்.

எனவே சமூக உளப்பிரச்சினைகளை நீண்டநாள் பிரச்சினைகள், உடனடிப்பிரச்சினைகள் என அணுகித் தீர்த்து வைத்தல் வேண்டும். குறிப்பாக அதிகம் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள், அங்கவீனமடைந்தோர் மீது அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும். இதற்குப் பல்துறை சார்ந்தவர்களதும் பல சமூக நிறுவனங்களினதும் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது.

இறுதியாக, பாதுகாப்புப் பிரச்சினைகளும் அணுகப்படல் வேண்டும். குறிப்பாக தனிநபரது பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு என்பன கருத்தில் எடுக்கப்படல் வேண்டும். தீங்கு செய்யக்கூடாது என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

மனித நேயப்பணியாளரது சேவை, பகலிலும் இருட்டில் தவிக்கும் முகாம் மக்களுக்குத் தேவை. மாறாக எல்லோரும் அவர்களைப் புறந்தள்ளி வைத்தால் இலங்கைக்குள் ஒரு பின்தள்ளப்பட்ட பிரஜைகள் குழுமம் என அவர்கள் சர்வதேசத்தினால் அடையாளமிடப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. அருகிவரும் மிருகங்களைப் பாதுகாக்க உலகில் எத்தகைய முற்காப்புக்கள் செய்யப்படுகின்றனவோ அதேபோல கம்பி வேலிக்குள் தவழும் ஒரு பின் தள்ளப்பட்ட இனத்தினைக்காக்கவும் சில நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் இன நல்லிணக்கத்திற்கான மாதிரிகள் நான்கு வகையாக உள்ளன.

1. இலங்கை அரசின் இன நல்லிணக்க மாதிரி - தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம், கட்டாய சிங்களக்கல்வி (சிவப்பு நிற இனநல்லிணக்க மாதிரி என இதனைக் குறிப்பிடலாம்)
2. தமிழ் மக்களது இன நல்லிக்க மாதிரி - இராணுவ விலகல், பிரதேச சுயாட்சி (பச்சை நிற இனநல்லிணக்க என இதனைக் குறிப்பிடலாம்)
3. இந்திய அரசின் இன நல்லிணக்க மாதிரி - இலங்கை இராணுவ மேலாதிக்கம், தேர்தல்கள் நடைபெறல். (மஞ்சள் இனநல்லிணக்க மாதிரி என இதனைக் குறிப்பிடலாம்)
4. மேற்கு நாடுகளினதும் ஐநாவினதும் இன நல்லிணக்க மாதிரி – தமிழர்களுக்கு ஜனநாயக உரிமை கிடைத்தல். (வெள்ளை நிற இனநல்லிணக்க மாதிரி என இதனைக் குறிப்பிடலாம்)

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் இதன் அடிப்படையில் அமைந்தன. இலங்கை அரசும் அதனோடு இணைந்த தமிழ் கட்சிகள் ஊடகங்கள் சிவப்புநிற இன நல்லிணக்க மாதிரியினை உருவாக்குவது போல் காட்டிக்கொள்கின்றன. தமிழ் தேசியக்கூட்டமைப்பு மஞ்சள் நிற இன நல்லிணக்க மாதிரிக்காக அரசியல் பேரம் பேசுகின்றது. இவை இரண்டிற்கும் இடையே தற்போது அரசியல் துரங்கம் நகர்த்தப்படுகின்றது. ஆனால் தமிழ் மக்களது உண்மையான தேவை பச்சை நிற இன நல்லிணக்க மாதிரியாகும். தற்போது பேசப்படும் 13இனை நீக்கலும் மஞ்சள் நிற இன நல்லிணக்க மாதிரியினை சிவப்பு நிற இன நல்லிணக்க மாதிரி பிரதியீடு செய்வதாக அமையும்.

இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் 4 வகையினர் உள்ளனர்.

1. இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். (சிவப்பு மனித உரிமைச்செயற்பாட்டாளர்கள்)

இலங்கை அரசின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். இவர்கள் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளை முதன்நிலைப்படுத்திச் செயற்படுபவர்கள். உலகில் தமிழர்களைப் பயங்கரவாதிகளாக காட்டியவர்கள். இவர்கள் தற்போது தமிழர்களை ஆட்கடத்தல்காரர் என உலகை குறிப்பாக அவுஸ்ரேலியாவினை நம்பவைக்க முனைகின்றனர். 2009 தமிழின அழிவினை, பயங்கரவாதிகளின் அழிவாகச் சித்தரித்து ஐநா மனித உரிமைப் பேரவையிலேயே ஆதரவுத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள். இவர்களிடம் தமிழ் பொதுமக்களின் அழிவு பற்றிய தகவல்களை காரணத்தை வெளிப்படுத்தும் தன்மை இல்லை. இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு இது மிகவும் குறைபாடாகும். தென்னிலங்கை அரசியல்வாதிகள், அரசுடன் இயங்கும் தமிழ் அரசியல்வாதிகள், தென்னிலங்கை பத்திரிகைகள் இவற்றினை அடிப்படையாக கொண்டவை. அண்மையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட இன நல்லிணக்க மகாநாடும் இத்தகையதே. இதில் யாழ் பல்கலைக்கழகமும் இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டது என்று குறிப்பிட்டிருந்தாலும் நிகழ்ச்சி அறிவித்தல்களை ஆங்கிலத்தில் வாசிக்க மருத்துவபீட மாணவியும் வரவேற்பு உரையை நிகழ்த்த துணைவேந்தரும் செயற்பட்டனர். இன நல்லிணக்கத்திற்கு 2009 அழிவுகளைப்பற்றியோ, இராணுவ ஆக்கிரமிப்பு பற்றியோ கதைக்காது சமஸ்கிரத பண்டிதரின் இருக்குவேத ஆராய்ச்சி கட்டுரையே யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து வாசிக்கப்பட்டது. ஏனையவை கொழும்பில் இருந்து தயாரிக்கப்பட்டவை. இந் நிகழ்வில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் நேரடித்தொடர்பு உடையவர்கள் மட்டும் பங்குபற்றினர். இன நல்லிணக்கம் தொடர்பான அடிப்படைக்கருத்துக்களை உள்வாங்காத தன்மையே இங்கு காணப்பட்டது. உதாரணமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவி படையினரைப் பாராட்டி பேசியமை, தமிழ் மக்களுக்கு படையினரால் ஏற்பட்ட அழிவுகளை அவர்கள் உணராத தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

2. தமிழ் மக்களது மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். (பச்சை மனித உரிமைச்செயற்பாட்டாளர்கள்)

இவர்களில் முக்கியமானவர் பிரான்சில் உள்ள திரு.வி.கிருபாகரன் ஆவர். தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களது அழிவுகள், ஆக்கிரமிப்புக்கள் குறித்து விழிப்பை ஏற்படுத்துவதில் மன்னார் ஆயர் இராஜப்பு யோசப் அடிகளார் முக்கியமானவர். இவர்களது அயராத முயற்சியாலேயே தமிழ் மக்களுக்கு இலங்கைப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டன.

3. மனித உரிமை நடுநிலையாளர்களாக காட்டிக்கொள்ளும் (மஞ்சள் மனித உரிமைச்செயற்பாட்டாளர்கள்) புலிகளை விரோதிக்கும் தமிழ் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இதில் பேராசிரியர். தயாசோமசுந்தரமும் அவரது குழாமும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (UTHR – J) என்ற அநாமதேயச் செயற்பாட்டாளர்களும் அடங்கும்.

மிகுந்த ஆங்கிலப்புலமை உள்ள இவர்கள், தமது கட்டுரைகளை சர்வதேச ரீதியில் பிரசுரிக்கின்றனர். இவர்களது செயற்பாட்டில் இந்திய புலனாய்வுப்பிரிவின் பின்னணி உள்ளது. இவர்கள் இலங்கை அரசையும் சர்டுவது போல் எழுதி இறுதியில் புலிகள் மீது முழுப்பொறுப்பையும் போட்டு விடுகின்றனர். 2009ம் ஆண்டு இலங்கை அரசால் புலிகள் முற்றாக அழிக்கப்பட்ட பின்பும் இவர்களின் மிக அண்மைய எழுத்துக்களில் கூட செத்த பாம்பினை திரும்பத்திரும்ப மெத்தப்பெரிய பொல்லால் அடிப்பது போல் தாக்கி எழுதி உள்ளமை இவர்களது உண்மைப் பின் புலத்தினை எடுத்துக்காட்டி உள்ளது. துரதிஸ்டவசமாக இவர்கள் தமிழ் பகுதியில் கடமையாற்றும் மருத்துவர்களிடம் இருந்து சில தரவுகளைப் பெற்று அதனை இலாவகமாக மாற்றி அமைத்து உள்ளனர். உதாரணமாக நோயாளிகள் கூறுவது போல் பல புனைவுக்கதைகளை தாமே எழுதிப் பிரசுரித்து உள்ளனர். இவர்கள் பணத்திற்காக மனித உரிமைகளைக் களவாடும் கூட்டமாகும். இதனை தமிழினம் முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அடுத்து சர்வதேச உரிமைச் செயற்பாட்டாளர்கள் (வெள்ளை மனித உரிமைச்செயற்பாட்டாளர்கள்)

இவர்களுக்கு இலங்கை அரசு ஒரு பக்கத்தகவல்களையே வழங்கினாலும் நவீன தொடர்பாடல், முறைமையினால் இவர்களால் உண்மைத் தகவல்களைப் பெறமுடிகின்றது. சனல் 4 ஆவணப்படம் இதில் ஒரு திருப்புமுனை. மேலும் ஐநா நிபுணர் குழு அறிக்கையும் உண்மைத்தன்மையை தெளிவாகக்காட்டி உள்ளது.

மொத்தில் தமிழ் மக்களுக்கு மனித உரிமை விடயத்தில் பாரிய அநீதி ஏற்பட்டு உள்ளது. அதனை நிவர்த்தி செய்வதற்கு உள்நாட்டிலோ அன்றி சர்வதேச ரீதியிலோ ஒரு பொறிமுறை இன்னமும் உருவாக்கப்படவில்லை. ஒரு திசைப்படுத்தப்பட்ட மனித உரிமைச்செயற்பாடுகள் ஆபத்தானவை. இவை தமிழின அழிப்பை தொடர்ந்து ஊக்குவிப்பதாகவே அமையும்.

இலங்கைத் தமிழர்கள்

1. யுத்த அழிவுகளால் கடுமையான சமூக உளத்தாக்கத்திற்கு உட்பட்டு உள்ளனர்.
2. அரசியல் தீர்வு கொடுக்கபப்படாமையினால் சமூக உளப்பாதிப்புக்கு உட்பட்டு உள்ளனர்.
3. பயங்கரவாதிகள் என்ற அடையாளத்தினால் சமூக உளப்பாதிப்புக்கு உட்பட்டு உள்ளனர்.

இதனை எதிர்கொள்ள தமிழர்களுக்கு உள்ள வழி நான்கு

1. கல்வி மூலம் முன்னேற்றம் அடைதல் வேண்டும்.
2. கூட்டான முயற்சி அவசியம்.
3. சமூக நீதிப்பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும்.
4. தமிழ் சமூகப்பாதிப்பு முறையாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

நல்லிணக்கப்போலிகள் பற்றிய வெளிப்பாடு

யுத்தத்தின் நேரடி பங்காளிகளின் புனர்வாழ்வைக்காட்டி, மக்கள் மீது நடைபெற்ற அநியாயங்கள் மறைக்கப்படல் தவறானது. நல்லிணக்கப் போலிகள் இதனை மேற்கொள்கின்றனர். யுத்தத்தில் நடைபெற்ற பாதிப்புக்களை தமிழ்க்குழுக்கள் மீது பழியை போட்டு, இன அழிப்பினை மூடி மறைக்கும் குழாம் சர்வதேச ரீதியில் மேற்கொள்கின்றது. இதுவும் ஓர் நல்லிணக்கப்போலிகளாகும். இவை முறையாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

1. எம்மை ஏன் அழித்தார்கள்.?
2. எமக்கு உலகநீதி ஏன் கிடைக்கவில்லை?
3. மனிதகுல முன்னேற்றத்துடன் தமிழினத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவது எவ்வாறு?

இவையே இன்று ஒவ்வொரு ஈழத்தமிழனும் சிந்திக்க வேண்டிய கேள்விகள். இதற்கு ஆக்க பூர்வமான விடையினை எமது எதிர்காலச் சந்ததி உருவாக்கும் என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org